RE/MAX Realtron BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710

மலர்:- 29, 03 மார்ச் 2023 இதழ்:- 45

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

## உள்ளக பொறிமுறைக்கு வடக்கு மக்கள் தயாராம்! வடக்குக்குச் சென்ற ஆணைக்குழு அறிக்கை!

பொறுப்புக்கூறல் நல்லிணக்கத்துக்கு சர்வதேச பொறி முறையை வடக்கு மக்கள் கோரினாலும் அவர்கள் ஓர் உள்ளக பொறிமுறைக்கு ஒப்புக் கொண்டனர் என்று மனித உரிமைகள் ஆணைக் குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிக்கையிட்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் கடந்த பெப்ரவரி 16-18ஆம் திகதி வரை வடக்கு சென்று பல தரப்பினரை சந்தித்துத் திரும்பியிருந்தனர். இதைத் தொடர்ந்து தமது பரிந்துரைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளனர். (7ம்பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் உயர் பாதுகாப்புக் குழுவின் வருகை ஒரு மென் இராணுவ நகர்வா?



இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடி உலக நாடுகளது அரசியல் தலையீட்டை அதிகரிக்கும் வாய்ப்பினை அந்த நாடுகளுக்கு வழங்கியுள்ளது. இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளது தலையீடு இலங்கையில் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது. அதனை கண்டு கொள்ளும் திறன் அல்லது புரிதல் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு கிடையாது. நாடு துண்டாடப்படக் கூடாது என்ற தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு கொழும்புத் துறைமுக நகரம் தென்னிலங்கையிலிருந்து துண்டாடப் பட்டுள்ளது என்பதை புரிந்து (19ம் பக்கம் பார்க்க)



## இந்திய மீனவர்களுக்கு அனுமதி! ரணில் அரசின் மற்றுமொரு சதி!

தமிழக மீனவர்களுடன் இலங்கைத் தமிழ் மீனவர்களை மோத விடுவதற்கான திட்டம் ஒன்றை வகுத்து ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் கடந்த வாரம் அரசியல் அரங்கில் இடம் பெறும் நிகழ்வுகளின் மூலமாக எழுந்திருக்கின்றது. (9ம் பக்கம் பார்க்க)

## முக்கிய வழக்கில் இருந்து ரணில் விடுதலை! மைத்திரியின் மேன்முறையீட்டு மனு நிராகரிப்பு!

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்ட 108 பேர் தாக்கல் செய்த வழக்குகளில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடுதலை செய்யுமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இந்த தீர்மானத்தை கொழும்பு மாவட்ட நீதிபதி மகேஷ டி சில்வா அறிவித்துள்ளார். (3ம் பக்கம் பார்க்க)

NISHANTHAN LAW OFFICE
Umanauthini Nishanthan LL.B.
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

CashPoint
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX Royal Properties
MORTGAGE ALLIANCE

THINKING OF
# SELLING OR BUYING A HOME?



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




20 Years Real Estate Experience


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply

HOMELIFE HIGHER STANDARDS

Bus: 416.298.3200
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT


• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Lawrence/ Galloway

Scarborough $499,900
Bedrooms: 4 Washrooms: 2
Close To Shopping, Hospitals


### Finch & Pharmacy

Scarborough $543,900
Bedrooms: 2 Washrooms: 1
Large Open Concept Area

### Eglinton/Markham

Scarborough $699,999
Bedrooms: 3 Washrooms: 2
Renovated with Oversized Balcony


### Angeline St. N & Springdale

Kawartha Lakes $749,900
Bedrooms: 3 Washrooms: 2
Brand New, Walkout Basement

### Kennedy & Dougall Ave

Caledon $799,888
Bedrooms: 3 Washrooms: 3
Semi-Detached Home

### Queens Quay & Lower Sherbourne

Toronto $889,000
Bedrooms: 2 Washrooms: 2
Waterfronts Luxury Corner unit

### Brisdale & Clockwork

Brampton $1,985,000
Bedrooms: 4 Washrooms: 4
Assignment Sale, Brand New Home

### Meadowvale / 401

Scarborough $1,899,999
Bedrooms: 4+3 Washrooms: 5
Stunning Top To Bottom Renovations

### Kipling Ave / Finch Ave


Toronto $549,900
Bedrooms: 2 Washrooms: 2
Location Location Location!!!

### Simcoe St & Winchester

Oshawa $549,999
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept Layout, Large Windows

### Woodbridge Ave/ Clarence

Vaughan $799,000
Bedrooms: 1+1 Washrooms: 1
Low-Rise Boutique Style Building

### Eglinton Ave. W /Mavis

Mississauga $799,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Charming Townhouse In A Great Area

### Keele/Sheppard

Toronto $810,000
Bedrooms: 3 Washrooms: 2
Bungalow-Raised Excellent Property

### Mccowan & Ellesmere
FOR LEASE

Scarborough $3,200
Bedrooms: 3 Washrooms: 1
Hardwood Floors Throughout

### Martingrove/Rexdale
FOR LEASE

Toronto $2,900
Bedrooms: 3 Washrooms: 1
Renovated Main Floor Unit

### Markham & Sheppard
FOR LEASE

Scarborough $2,500
Bedrooms: 1+1 Washrooms: 1
Open Concept Unit With Parking

## PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை

என் இனிய வாசகர்களே!

கனடிய மண்ணில் கடந்த 30 ஆண்டுகளாக எந்தச் செய்தியையும் முந்தித் தரும் ஒரே ஏடான உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின் 30வது ஆண்டு விழா எதிர்வரும் 23 ஏப்ரல் 2023 ஞாயிற்றுக்கிழமை அன்று மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

கலைமாமணி ராஜேஸ் வைத்தியா அவர்களின் வீணை இசைக் கச்சேரி நடைபெறவுள்ளது. மிக நீண்ட காலத் திற்குப் பின்னர் கலைமாமணி ராஜேஷ் வைத்தியா அவர்கள் கனடாவில் கலந்து நிகழ்ச்சி இதுவாகும்.

கடந்த 30 ஆண்டுகளாக இடையூறு இன்றியும் தடையூறு இன்றியும் வெளி வந்து கொண்டிருக்கும் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை கடந்த 3 ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட கொரானா என்னும் கொடிய நோய்த் தாக்கத்தி னால் ஏற்பட்ட பொருளாதார சரிவும் நெருக்கடியும் காரணமாக பல்வேறு சவால்களை எதிர் கொண்டுள்ளது. குறிப்பாக விளம்பரம் தருகின்ற வர்த்தகர்களின் வர்த்தகத்தில் ஏற்பட்ட சரிவு எமக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இது அனைத்து ஊடகத்துறையினரு க்கும் முன்னால் உள்ள சவால்கள் ஆனாலும் எமக்குஅதுவொரு பெரும் தாக்கமாகும். காரணம் நாம் இன்றும் தாயகத்திலும் கொழும்பிலும் செய்தி யாளர்களை வைத்து ஊதியம் வழங் கியே செய்திகளைப் பெற்று வருகின் றோம் அதனாலேயே இன்றும் எந்தச் செய்தியையும் முந்தித் தருகின்ற ஊடகமாக ஈழநாடு விளங்குகின்றது என்பதை வாசகர்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்பது திண் ணம்.




இந்தப் பொருளாதார நெருக்கடியைச் வெற்றிகரமாக கடந்து ஈழநாடு தொட ர்ந்து பயணிக்க வாசகர்களாகிய நீங்கள் தான் கை கொடுக்க வேண்டும். இந்த நம்பிக்கையின் அடிப்படை யிலேயே 30வது ஆண்டு விழா நடை பெறவுள்ளது.

எமது இனிய வாசகர்கள், அபிமானி கள், கலா ரசிகர்கள் அனைவரும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப் பிக்குமாறு அன்புரிமையுடன் அழைக் கின்றேன்.

இவ்வாண்டு மண்டபத்தின் இருக் கைகளின் நம்பர்கள் நுழைவுச் சீட்டில் அச்சடிக்கப்பட்டுள்ளது.

எனவே அன்புள்ளங்கள் இறுதி நேரம் வரை காத்திருக்காமல முற்கூட்டியே அனுமதிச் சீட்டினைப் பெற்றுக் கொள் ளுங்கள். 416 841 9600 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள் ளவும். நன்றி! வணக்கம்!

# முக்கிய வழக்கில் இருந்து ரணில் விடுதலை! மைத்திரியின் மேன்முறையீட்டு மனு நிராகரிப்பு!





உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக் கப்பட்ட 108 பேர் தாக்கல் செய்த வழக்குகளில் பிரதிவாதியாக குறிப் பிடப்பட்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடுதலை செய்யு மாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.இந்த தீர்மானத்தை கொழும்பு மாவட்ட நீதிபதி மகேஷ டி சில்வா அறிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப் பட்ட பயங்கரவாதத் தாக்குதலைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததால், தங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி இந்த வழக்கு கள் தாக்கல் செய்யப்பட்டன.


இந்த வழக்குகள் முன்னர் விசாரணை க்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பூர்வாங்க ஆட்சேப னையை முன் வைத்ததுடன், தமது கட்சிக்காரர் தற்போது ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளதால், அரசியலமைப் பின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது என சுட்டிக்காட்டி னர்.

அதன் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக தற்போது வழக்குத் தொடர முடியாது என மாவ ட்ட நீதிமன்றம் தீர்ப்பளித்து, பின்னர் இந்த உத்தரவை பிறப்பித்தது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை நிராகரித்து மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சஞ்சீவ மொரேஸ் மற்றும் பிராங்க் குணவர்தன ஆகிய நீதிபதிகள் குழு இந்த உத்த ரவை பிறப்பித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக் கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி தமக்கு எதிராக தாக்கல் செய்யப் பட்டுள்ள அனைத்து வழக்குகளையும் கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நிரா கரித்து அந்த வழக்குகளில் இருந்து தன்னை விடுவித்து உத்தரவு பிறப் பிக்குமாறு கோரி மைத்திரிபால சிறி சேன இந்த மனுவை தாக்கல் செய்தி ருந்தார். உயிர்த்த ஞாயிறு பயங்கர வாதத் தாக்குதலைத் தடுக்க போதிய புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்தும் நடவடிக்கை எடுக்காதத ற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன உள்ளிட்டோருக்கு எதிராக பாதிக்கப்பட்டவர்கள் கொழு ம்பு மாவட்ட நீதிமன்றத்தில் 108 வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# தலைவர் பிரபாகரன் பற்றிய நெடுமாறனது கூற்று உண்மை அல்ல வெளிநாடுகளில் நிதி திரட்டலுக்கானது!



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதாக பழ. நெடுமாறன் வெளியிட்ட தகவல், நிதி சேகரிப்புக்கான ஓர் அறிவிப்பாகும் என தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் 28 பெப் 2023 செவ்வாய் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய போது, அவர் இந்த விடயத்தைக் கூறினார். இந்த நிதி சேகரிக்கும் நடவடிக்கைக்கான கூட்டம் சுவிட்ஸர்லாந்து நாட்டிலேயே முதன் முதலில் நடந்ததாக அவர் குறிப்பிட்டார்.

பிரபாகரனின் மகள் துவாரகா லண்டனில் இருப்பதாகவும், அவருடைய வாழ்வாதாரத்துக்காக நிதி சேகரிக்கப் போவதாகவும் அந்தக் கூட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் கூறியதாகவும் சித்தார்த்தன் எம்பி தெரிவித்தார்.

அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட சுவிட்ஸர்லாந்திலுள்ள ஒருவர், பிரபாகரனின் மகளைப் பார்க்க வேண்டுமென கோரிக்கை விடுத்ததாகவும், அந்த நபரின் மகளும் பிரபாகரனின் மகளும் ஒன்றாகப் படித்தவர்கள் எனவும் சித்தார்த்தன் கூறினார்.

இதனையடுத்து அந்த நபர் லண்டனுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும், அங்கு பிரபாகரனின் மகள் என ஒரு பெண் அறிமுகப்படுத்தப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் இதன் போது குறிப்பிட்டார்.

அந்தப் பெண்ணிடம் சுவிட்ஸர்லாந்திலிருந்து சென்றவர், 'உங்களுக்கு வாகனம் ஓட்டுவதற்கு கற்றுத் தந்தவர் யார்' என கேட்டுள்ளார்.

பிரபாகரனின் மகளுக்கு யார் வாகனம் ஓட்டக் கற்றுக் கொடுத்தார் என்று சுவிட்ஸர்லாந்திலிருந்து சென்ற நபருக்குத் தெரியும். புலிகளின் பெண்கள் படையொன்றிலுள்ள ஒருவர் தான் பிரபாகரனின் மகளுக்கு வாகனம் ஓட்டக் கற்றுக் கொடுத்தார்''.

அந்தக் கேள்விக்கு பிரபாகரனின் மகள் எனக்கூறப்பட்ட பெண், தவறான ஒரு பதிலை வழங்கியுள்ளார். இதனையடுத்து அந்த நபர், இந்த விடயத்தை உடனடியாக சுவிட்ஸர்லாந்தில் உள்ளவர்களுக்குத் தெரியப்படுத்தி, அங்கு நிதி சேகரிக்கும் நடவடிக்கையை முறியடித்தார்'. எனவும் சித்தார்த்தன் எம்.பி தெரிவித்தார்.

தனக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலும், தான் அறிந்த வகையிலும் பிரபாகரன் உயிரோடு உள்ளதாக அறிவிக்கப்பட்டமையானது, நிதி சேகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையாகும் என்று அவர் கூறினார். சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்ற கூட்டத்துக்குச் சென்றவர்களும் தன்னிடம் இதையே சொன்னதாகவும் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.


இது கேவலமானதும், மலினப்படுத்துகின்றதுமான ஒரு செயல்பாடாகும்' எனவும் அவர் மேலும் கூறினார்.

தம்பி பிரபாகரன் மீது நான் மதிப்பு வைத்துள்ளேன். காரணம், அவர் தனது ஒட்டுமொத்த குடும்பத்தையும் அர்ப்பணித்தவர் என்பதனாலாகும். அந்த அர்ப்பணிப்புகளை மலினப்படுத்தி, நாலு பேர் சீவியம் நடத்துவதற்காக பணம் சேர்க்கும் வேலையாகவே இது உள்ளது எனவும் அவர் குற்றஞ்சாட்டினார். பழ. நெடுமாறன் எங்களுடனும் நெருக்கமாக இருந்தவர். பிரபாகரன் உயிரோடு இருப்பதாக அவர் கூறியதை, பின்னர் சொன்னார்கள், சொன்னேன்' என, அவரே குறிப்பிட்டிருக்கிறார். அதாவது பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்று, யாரோ சொல்லச் சொன்னதை அவர் சொல்லியிருக்கிறார் என்கிறார் சித்தார்த்தன்.



இவ்விடயம் தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனை பிபிசி தமிழ் தொடர்பு கொண்டு பேசியபோது் புலிகள் இயக்கம் செயற்பாட்டில் இருந்த காலத்தில், அவர்களின் சுவிஸ் கிளையின் முக்கியஸ்தராக இருந்த ஒருவரும், சுவிஸர்லாந்தில் நடத்தப்பட்ட நிதி சேகரிப்புக்கான கூட்டத்தில் பங்கேற்றிருந்தாக கூறினார்.


(22ம் பக்கம் பார்க்க)



ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்
கனடா – அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்
1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)
Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

04 மார்ச் 2023 சனிகிக்கிழமை:- சனிப்பிரதோஷ விரதம்

06 மார்ச் 2023 திங்கள் கிழமை- பௌர்ணமி விரதம் பூஜை
உபயம்: அழகேசன் குடும்பம்

06 மார்ச் 2023 திங்கள் கிழமை- மாசிமகம் விரதம் பூஜை
உபயம்: பா. உதயகுமார்

பால்குடம் எடுக்க விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# இலங்கையின் கடன் நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வு காண்பதை முன்னிறுத்தி செயற்பட தயாரென ஜி20 நாடுகள் இணக்கம்



இலங்கையின் கடன் நெருக்கடிநிலைக்கு உடனடியாகத் தீர்வு காண்பதை முன்னிறுத்தி செயற்படத் தயாராக இருப்பதாக ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவின் பெங்களூர் நகரில் கடந்த 24 - 25 ஆம் திகதிகளில் நடைபெற்ற ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டில் கடன்நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர வருமானம் பெறும் நாடுகளுக்கு உதவுதல், அதனை முன்னிறுத்தி கடன்வழங்குனர்கள் ஒன்றிணைந்து செயலாற்றுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது ஜி-20 நாடுகளின் நிதியமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்கள் மாநாட்டின் பெறுபேறு குறித்த ஆவணம் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் வாசிக்கப்பட்டது. அதில் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் முகங்கொடுத்திருக்கும் கடன்நெருக்கடிக்கு உடனடியாகத் தீர்வுகாணவேண்டியதன் அவசியத்தை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'கடன் நெருக்கடியினால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்குரிய தீர்வை அனைவரும் ஒருங்கிணைந்து பெற்றுக்கொடுப்பதற்கு உத்தியோகபூர்வ இருதரப்பு மற்றும் தனியார் கடன்வழங்குனர்கள் கூட்டாக இணைந்து பல்தரப்பு ஒருங்கிணைவை வலுப்படுத்துவது அவசியமாகும். இவ்வாறானதொரு பின்னணியில் 'கடன் இரத்திற்கு அப்பால் கடன் நெருக்கடியைக் கையாள்வதற்கான பொதுச் செயற்திட்டத்தை உருவாக்கல்' என்ற அடிப்படையின் கீழ் உருவாக்கப்பட்ட அனைத்துக் கடப்பாடுகளையும் நாம் ஏற்றுக் கொள்கின்றோம். அதேபோன்று அந்தப் பொதுச்செயற்திட்டத்தை உரியவாறான காலப்பகுதியில், முன்னெதிர்வு கூறக்கூடிய அடிப்படையில், ஒருங்கிணைந்த முறையில் அமுல்படுத்தவேண்டும்' என்று அந்த ஆவணத்தில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உயிர்ப்புடன் விடுதலைப்புலிகளின் வலையமைப்பு அமெரிக்கா வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்!

விடுதலைப்புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் செயற்படுகின்றது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தமிழீழவிடுதலைப்புலிகள் தொண்டு நிறுவனங்களை பயன்படுத்தி நிதி திரட்டி தமது செயற்பாடுகளிற்கு பயன்படுத்துகின்றனர் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா 27 பெப் 2023 வெளியிட்ட பயங்கரவாதம் குறித்த 2021ம் ஆண்டிற்கான அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009இல் இலங்கை அரசாங்கத்தால் இராணுவரீதியில் தோல்வியடைந்த போதிலும் விடுதலைப்புலிகளின் சர்வதேச ஆதரவாளர்கள் வலையமைப்பும் நிதி ஆதரவும் தொடர்கின்றதுஎன அமெரிக்கா தெரிவித்துள்ளது.




2009முதல் விடுதலைப்புலிகள் அமைப்பு செயல்பாடின்றி உள்ளது 2009ம் ஆண்டின் பின்னர் விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படும் எந்த தாக்குதல்களும் இல்லை எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

# ஜனாதிபதி ரணிலைக் கொலை செய்யத் திட்டம்? பொலிஸ் ஊடகப் பிரிவு விளக்கம்!



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொலை செய்ய சதித்திட்டம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் இணையத்தளமொன்றில் வெளியாகியுள்ள செய்தி உண்மைக்கு புறம்பானது என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொலை செய்ய நாட்டின் அரசியல் கட்சி ஒன்றைச் சேர்ந்த குழுவொன்று வெளிநாட்டில் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதாக 28 பெப் 2023 தனியார் வானொலி ஒன்றின் இணையதளத்தில் வெளியிடப்பட்ட செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இரண்டு வார காலத்திற்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கொலை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறித்த இணையத்தளத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அவ்வாறான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் ஜனாதிபதியை கொலை செய்ய முயற்சிப்பதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் எந்தவொரு விசாரணைகளும் இதுவரையில் முன்னெடுக்கப்படவில்லை என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெளிவுபடுத்தியுள்ளது.

# மகிந்தாவிடமுள்ள தீர்வு என்ன?



13வது திருத்தச்சட்டம் நாட்டிற்கு தேவையற்ற ஒன்றென்று மகிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தவுள்ளதாக கூறிய போது, மகிந்த ராஜபக்ஷ அப்பிராயங்கள் எதனையும் தெரிவித்திருக்கவில்லை. ஆனால் பௌத்த பிக்குகளின் கூச்சல்களை தொடர்ந்து, 13 தேவையற்ற ஒன்றொன்று கூறியிருக்கின்றார்.

13 தேவையற்ற ஒன்றென்று கூறுவதுடன் பிரச்சினை முடிந்து விடப்போவதில்லை அது பொருத்தமற்றதென்றால், அடுத்தது என்ன எது பொருத்தமானதென்று, மகிந்த கூற வேண்டும். மகிந்தவின் சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ, தமிழ் மக்களுக்கு இந்த நாட்டில் பிரத்தியேகமான அரசியல் பிரச்னைகள் எதுவுமில்லையென்று கூறியிருந்தார். மகிந்தவும், அவரது சகோதரரின் வழியில் சிந்திக்கின்றாரா?

உள்நாட்டு யுத்தம் முடிவுற்றதை தொடர்ந்து, ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் சிறிலங்காவை பாராட்டி தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அந்த தீர்மானத்தில் கூட, இலங்கையின் இனப்பிரச்னைக்கான தீர்வாக, 13வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் தீர்வை காண வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டிருந்தது. அதன் பின்னர், ஐ.நா செயலாளர் நாயகம் பான்கீமூனுடனான சந்திப்பின் போதும், மகிந்த ராஜபக்ஷ 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாக வாக்குறுதியளித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து பல்வேறு சந்தர்பங்களில் 13 பிளஸ் தொடர்பில் மகிந்த பேசியிருந்தார். இந்திய விஜயத்தின் போதும் இதனை வலியுறுத்தியிருந்தார். அதாவது, 13,ற்கும் அப்பால் சென்று பிரச்னைகளை தீர்க்கப் போவதாக கூறியிருந்தார். ஆனால் இப்போது 13 நாட்டிற்கு பொருத்தமில்லையென்று குத்துக்கரணமடித்திருக்கின்றார்.

ஒன்றை நிராகரிக்கின்ற போது, அதற்கு மாற்று வழியொன்றை முன்வைக்க வேண்டும். அது தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். 13 போதாது என்பதே தமிழர்களின் நிலைப்பாடாக இருக்கின்றது. 13,ற்கு அப்பால் செல்ல வேண்டுமென்பதே தமிழர்களின் நிலைப்பாடு. ஒற்றையாட்சிக்குள் பகிரப்படும் எந்தவொரு அரசியல் தீர்வும் பொருத்தமானதல்ல என்பதே, கடந்த 74 வருடங்களாக, தமிழர்களின் நிலைப்பாடாக இருந்திருக்கின்றது.

ஆனாலும் முதலில், 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துங்கள், பின்னர் அதிலிருந்து முன்னோக்கி பயணிக்கலாமென்னும் நிலைப்பாட்டிற்கு பெரும்பாலான தமிழ் தேசிய கட்சிகள் உடன்படுகின்றன. ஆனால் அதனை தென்னிலங்கையால் நிறைவேற்ற முடியவில்லையாயின், சிங்களவர்களும் தமிழர்களும் இணைந்து வாழ முடியுமென்னும் நம்பிக்கையை எவ்வாறு ஏற்படுத்த முடியும்?

இலங்கைத்தீவை அதளபாதாளத்தில் தள்ளிவிட்டதில் மகிந்த ராஜபக்ஷவின் தவறான கொள்கைகளும், குடும்ப அதிகார ஆசையுமே பிரதான காரணங்களாகும். இந்த நிலையில் மீண்டும் அதிகாரத்தை தக்க வைப்பதற்காக தமிழர் விரோத துருப்பு சீட்டையே மகிந்த மீளவும் கைக்கொள்ள முயற்சிக்கின்றார். மகிந்தவை மீண்டும் பிரதமராக நியமிக்க வேண்டுமென்னும் கோரிக்கை சிலரால் முன்வைக்கப்பட்டுவரும் சூழலில் தான், மகிந்த இவ்வாறானதொரு கதையை கூறியிருக்கின்றார்.

அரசியலமைப்பில் இருக்கின்ற ஒரு விடயத்தை பொருத்தமற்றதென்று கருதினால், அதனை விடவும் சிறப்பான ஒன்றை கொண்டு வருவதன் ஊடாக, பொருத்தமற்றதை நீக்க முடியும். ஆனால் இருப்பதையே அமுல்படுத்த முடியாதவொரு சூழலில், அதனை விடவும் சிறப்பான ஒன்றை எவ்வாறு கொண்டு வருவது?

# வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால் தான் தமிழர்களின் இருப்பு பாதுகாக்கப்படும் - வியாழேந்திரன்



வடகிழக்கு இணைக்கப்பட வேண்டும் வடகிழக்கு இணைக்கப்பட்டால் தான் கிழக்கின் இருப்பை பாதுகாக்க முடியும். இணைந்த வட கிழக்கில் தான் தமிழர்களின் இருப்பும் பாதுகாக்கப்படும்.

வடக்கு கிழக்கை பிரிப்பதில் மிக முக்கியமான சூத்திரதாரியாக மக்கள் விடுதலை முன்னணியினர் செயற்படுவதாக இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் 28 பெப் 2023 இடம் பெற்ற நிகழ்வொன்றில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் பின்னால் குத்தும் நல்லிணக்கத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். நல்லிணக்க அரசியல் என்பது தமிழர்களின் இருப்பை அழிக்கின்ற அல்லது அழிக்க நினைக்கின்ற ஒன்றாகும். இந்த அரசியலுக்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்பதில் ஆயிரம் வீதம் உறுதியாக இருப்பவர்கள் நாங்கள். வட கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்று 1987 ஆம் ஆண்டு இந்தியா வடகிழக்கு பிரச்சினைக்கு ஒரு தீர்வை கொண்டு வந்தது.

இதற்கமைய வடகிழக்கு இணைப்பு சம்பந்தமான ஒப்பந்தம் வந்த பொழுது இணைந்த வடகிழக்கு இருந்த போது அதன் பின் இந்த வடகிழக்கு பிரிக்கப் பட்டது. இந்த வடகிழக்கை பிரித்ததிலே மிக முக்கியமான சூத்திரதாரியாக இருந்த கட்சி மக்கள் விடுதலை முன்னணி கட்சியாகும். இன்று காலையில் ஒரு செய்தியை பார்த்தேன், 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக எதிர்ப்பதாக கட்சியின் உறுப்பினர் சுனில் ஹந்துன் நெத்தி ஊடக சந்திப்பின் போது தெரிவித்துள்ளார். இதன் போது அவர் எமது நிலைப்பாடும் சம்பந்தனின் நிலைப்பாடும் இதுவாகவே இருக்கின்றதாக குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு மக்களுக்கு விருப்பம் இல்லாத அரசியல் தீர்வு எமக்கு வேண்டாம் என்று சம்பந்தன் தெரிவித்ததற்கு அமைவாக நாங்களும் அதை எதிர்க்கின்றோம் என்று சுனில் ஹந்துன் நெத்தி இதன் போது தெரிவித்துள்ளார்.

கிழக்கில் எங்களது அரசியல் நிலைப்பாடு தமிழர்களின் நிலவள பொருளாதார இருப்பை தமிழர்களோடு இருந்து கொண்டு முதுகில் குத்துகின்ற இந்த நல்லிணக்க அரசியலுக்கு எமது கழகம் ஒரு போதும் ஒத்துக் கொள்ளாது.

ஆகவே வடகிழக்கு இணைக்கப்பட வேண்டும், வடகிழக்கு இணைக்கப் பட்டால் தான் கிழக்கின் இருப்பை பாதுகாக்க முடியும். இணைந்த வட கிழக்கில் தான் தமிழர்களின் இருப்பு பாதுகாக்கப்படும். இணையாத வடகிழக்கில் காணி பொலிஸ் அதிகாரம் வழங்கப் பட்டால் வடமாகாணம் ஓரளவு தப்பி பிழைக்கலாம்! கிழக்கு தப்பி பிழைக்காது.

காணி பொலிஸ் அதிகாரம் இல்லாமலே கிழக்கு மாகாண ஆளுநருடைய சில நடவடிக்கைகள் ஏற்கத்தகாத சில திட்டமிட்ட குடியேற்றங்களுக்கு துணை போகின்ற தன்மை. சில முஸ்லிம் இனவாத அரசியல்வாதிகள் தமிழர்களுடைய நில வளத்தை சூறையாடுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு வேளை இணைந்த வடகிழக்கு இல்லாமல் தனியாக கிழக்கு மாகாண சபைக்கு காணி பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் உங்களது நிலைமை என்னவாகும் என்று சிந்தித்துப் பாருங்கள். நாங்கள் உறுதியாக சொல்லுகின்றோம். வடகிழக்கு இணைக்கப்பட வேண்டும்.இணைந்த வடகிழக்குக்கு தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய சீர் திருத்தத்துடன் கூடிய 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இணைந்த வடகிழக்கில் தான் கிழக்கை பாதுகாக்க முடியும், கிழக்கை பாதுகாத்தால் தான் வடகிழக்கை இணைக்க முடியும் என்று கூற விரும்புகின்றேன் என தெரிவித்துள்ளார்.

**வெள்ளிக்கிழமைகளில்**
**உங்கள் அபிமான**
**ஈழநாடு பத்திரிகையை**
**eelanadu.ca**
**மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

**Math & Physics Tutoring**
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# உள்ளக பொறிமுறைக்கு வடக்கு மக்கள் தயாராம்! வடக்குக்குச் சென்ற ஆணைக்குழு அறிக்கை!

பொறுப்புக்கூறல் – நல்லிணக்கத்துக்கு சர்வதேச பொறிமுறையை வடக்கு மக்கள் கோரினாலும், அவர்கள் ஓர் உள்ளக பொறிமுறைக்கு ஒப்புக் கொண்டனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிக்கையிட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினர் கடந்த பெப்ரவரி 16–18ஆம் திகதி வரை வடக்கு சென்று பல தரப்பினரை சந்தித்துத் திரும்பியிருந்தனர். இதைத் தொடர்ந்து தமது பரிந்துரைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஆறு பரிந்துரைகள் கொண்ட அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:– நீண்டகாலம் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் தொடர்பாக, வடக்கிலுள்ள மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பவும் அரசாங்கம் இந்தப் பிரச்னையை தீர்க்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். சில கைதிகள் விசாரணை முடிவடையும் வரை 14 வருடங்கள் மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த விவகாரத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனை குழு மூலம் நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படுகிறது. விசாரணை நிலுவையில் ஒரு நபரை 14 ஆண்டுகள் காவலில் வைத்திருப்பது அரசமைப்பின் கீழும் சர்வதேச உடன்படிக்கையின் சிவில் அரசியல் உரிமைகளின் கீழும் அவரின் உரிமைகள் மீறலாகும். செய்த குற்றத்தின் தன்மை மற்றும் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளின் நடத்தை ஆகியவற்றை அறிந்து அவர்களுக்கு மன்னிப்பளிக்க பரிந்துரைக்கப்படுகிறது. அல்லது அது பொருத்தமானதாகக் கருதும் போதெல்லாம் விசாரணையின் முடிவுக்கு காத்திருப்பவர்களுக்கான வழக்கை தொடராமல் விடலாம்.

ஆணைக்குழு இந்த விடயங்களை உரிய தீர்வுக்காக கைதிகளுக்கு பொறுப்பான அமைச்சுக்கு பரிந்துரைக்கின்றது. நல்லிணக்கம் தொடர்பான விடயம் தற்போது பொருத்தமானதாகவும் அவசரமாகவும் மாறியுள்ளது. பங்கேற்பாளர்கள் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்காக சர்வதேச பொறிமுறைக்கு ஆதரவாக இருந்தாலும் அவர்கள் ஓர் உள்ளக பொறிமுறைக்கு ஒப்புக் கொண்டனர். உண்மை ஆணையம் தகுதி மற்றும் நேர்மையுடன் உறுப்பினர்களை கொண்டுள்ளது. மேலும், அரசாங்கத்தின் எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் பாதிக்கப்பட்டவர்களின் பிரதிநிதிகளின் பங்கேற்பை அனுமதிக்கிறது.

பாராளுமன்ற அதிகாரத்தின் கீழ் அமைக்கப்பட்ட உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவும் பாராளுமன்ற சட்டம், சுயாதீனமாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் செயல்பட அரசியல் தலையீடுகளின்றி முன் வைக்கப்பட்டுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் போதுமான அதிகாரங்களை கொண்டிருக்க வேண்டும்.

உண்மை ஆணைக்குழு அதன் தொடக்கத்திலிருந்தே பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியும் அல்லது ஆணையத்தை நிறுவுவதற்கான முன்நிபந்தனையாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நம்பிக்கையையும் கட்டியெழுப்ப பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர், நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்பான பிரச்னைகளுக்கு அர்த்தமுள்ள தீர்வு காண்பது அடிப்படையாகும்.

போதைப்பொருள் கடத்தல் பிரச்னைக்கு தீர்வு காண கடற்படையின் எல்லைக் கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும். வடக்குக்கு நிரந்தர சோதனைச் சாவடிகள் மற்றும் தடைகள் வழக்கமான குற்றவாளிகளிடமிருந்து பொது மக்களைப் பாதுகாப்பதற்கும் தேசிய பாதுகாப்பு மற்றும் பொது ஒழுங்குக்கும் அவசியம். பாதுகாப்பு சபையால் சேகரிக்கப்பட்ட புலனாய்வுத்தரவுகள் மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களின் தேசிய பாதுகாப்பு தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் பொருந்தக்கூடிய நிலையான பாதுகாப்பு கொள்கையைப் பெறுவது பரிந்துரைக்கப்படுகிறது. பாதுகாப்புப் பிரச்னையில் வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான வேறுபாடு களை நிவர்த்தி செய்வதே ஆணைக் குழுவின் முக்கிய அக்கறையாக இருந்தது.

மன்னாரில் சோதனைச் சாவடிகளைக் கடக்கும் மக்களுக்கு இராணுவம் பெண்கள் மீது உடல் சோதனை செய்வதன் மூலமோ அல்லது பயணிகளை பேருந்துகளில் இருந்து இறக்கி விடுவதன் மூலமோ அல்லது லொறிகளில் இருந்து பொருட்களை இறக்குவதன் மூலமோ கடுமையான துன்புறுத்தல் ஏற்படுவதாக தெரிய வந்தது. சீரான பாதுகாப்புக் கொள்கை நிறுவப்படும் வரை, உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில், சோதனைச் சாவடிகளில் மாற்று முறைகளில் சோதனையிடுமாறு பொலிஸ் மற்றும் இராணுவத்துக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.

# கனடா ஐயப்பன் ஆலயத்தின் பிரதான குருசுவாமி சுப்பிரமணியம் மீது அனலைதீவில் வைத்து வாள்வெட்டுத் தாக்குதல்! பொருட்கள் கொள்ளை!




கனடாவில் இருந்து ஐயப்பன் பக்தர்களுடன் சபரிமலைக்குச் சென்ற குருசாமி நாகலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் ஐயப்ப விரதத்தின முடித்துக் கொண்டு தனது துணைவியாருடன் சொந்த ஊரான அனலைதீவிற்கு சென்று வீடு புனரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். வழமையாக இவ்வாறு சபரிமலை சென்ற பின்னர் தாயகம் சென்று வருவதை வழக்கமாகவே கொண்டிருந்தார். சம்பவ தினம் நால்வர் அடங்கிய கும்பல் வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டு 3 ஆயிரம் டொலர் மற்றும் கடவுச் சீட்டு உட்பட்ட பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது வாள் வெட்டிற்கு இலக்கானவரின் வீட்டில் அயலில் உள்ள பாடசாலையில் கற்பிக்கும் இரு ஆசிரியர்களும் கனடாவில் இருந்து வந்த இவரது மனைவியும் தங்கியிருந்த சமயம் 24 பெப்ரவரி 2023 அதிகாலை 12.00 மணியளவில் முகங்களை கறுப்புத் துணியால் மூடியவாறு 4 நான்கு பேர் கதவை உடைத்து வீட்டிற்குள் நுழைந்துள்ளனர்.

இவ்வாறு நுழைந்த கும்பல் வீட்டில் தங்கியிருந்த ஆசிரியர்களை கட்டி வைத்து விட்டு கனடாப் பிரஜையான குருசுவாமி அவர்களை வாளால் வெட்டியதோடு கனடா கொண்டு வர தயார் செய்யப்பட்ட பொதிகளையும் சேதப்படுத்தி கனடா அவர்களது உடமைகளை சல்லடை போட்டு தேடியுள்ளனர். இதன் போதே 2 ஆயிரம் கனேடிய டொலர், ஆயிரம் அமெரிக்க டொலருடன் இலங்கை நாணயம் மற்றும் கடவுச் சீட்டையும் எடுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் போது படுகாயமடைந்த குருசாமி அவர்கள் அதிகாலையில் படகு மூலம் ஊர்காவற்றுறை கொண்டு செல்லப்பட்டு அதிகாலை 2.00 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. தற்போது ஓரளவு உடல் நலம் தேறி வருவதாக உறவுகள் தெரிவிக்கின்றனர்.

# நினைவழியா இன, இறை பணியாளர் திரு அன்னர் பிலிப் சின்னராசா!






தமிழினத்தின் விடுதலைக்காகவும் தேசத்தின் சுதந்திரத்திற்காகவும் ஓங்கி ஒலித்த குரலுக்குச் சொந்தக்காரரான திரு. அன்ரன் பிலிப் சின்னராசா அவர்கள் கனடாவில் காலமானார்!

1983 யூலை 25, 27 ஆம் தேதிகளில் நடைபெற்ற வெலிக்கடை சிறைப் படுகொலைகளிலிருந்து தப்பியவர். இறுதிப் போரின் போது இலங்கை இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை மற்றும் மானுடத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்த ஐ.நா. மனித உரிமைகள் மன்ற விசாரணைகளுக்குத் தேவையான ஆவணத் தொகுப்பு விடயங்களில் திரு.பிலிப் சின்னராசா அவர்கள் அண்மைக் காலங்களில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வந்தவர்.

தன்னலமற்ற சேவை மற்றும் எண்ணற்ற தன்னார்வப் பணிகளுக்காகப் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் மிகவும் மதிக்கப்படுபவர். ரொறொன்ரோ தமிழ் கத்தோலிக்க சமூகத்தோடு நீண்ட காலமாக இணைந்து இயங்கி வந்தவர். இவ்வாறான பல்வகைப் பரிமாணங்களைக் கொண்ட பிலிப் சின்னராசா அவர்களது இழப்பினால் வாடும் குடும்ப உறுப்பினர்கள் நண்பர்களுக்கு ஈழநாடு பத்திரிகை வாசகர்கள் சார்பிலும் குடும்பத்தினர் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

# கொழும்பு ஆர்ப்பாட்டத்தின் போது உயிரிழப்பு! மனித உரிமை மீறல்! சுயாதீன விசாரணை அவசியம்!

AMNESTY INTERNATIONAL

ஆர்ப்பாட்டக்காரர்களிற்கு எதிராக பல த்தை கடைப் பிடிக்கும் போது நிதான த்தை கடைப்பிடிக்க வேண்டும் என சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டு கோள் விடுத்துள்ளது.

அமைதியாக ஒன்று கூடுவதற்கான உரிமையை பின்பற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டும் எனவும் சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கொழும்பில் பொலிஸார் மேற்கொண்ட சட்டவிரோத கண்ணீர்புகை பிரயோகம் நீர்த்தாரை பிரயோகம் காரணமாக ஆர்ப்பாட்டக்காரர்களில் ஒருவர் உயிரிழ ந்துள்ளார் என்ற செய்தி குறித்து பதில ளித்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபையின் ஆர்ப்பாட்டங்களிற்கான உரிமை தொடர் பிலான பிராந்திய ஆராய்ச்சியாளர் ஹரிந்திரினி கொரியா இலங்கையில் பல மாத ஆர்ப்பாட்டங்களிற்கு பின்னரும் இலங்கை பொலிஸாருக்கு அமைதியான ஒன்றுகூடலிற்கான உரிமையை உறுதி செய்யவேண்டிய அவர்களது கடமை குறித்தும் ஆர்ப்பாட்டங்களை கட்டுப் படுத்தும் போது கட்டுப்பாட்டை பின் பற்ற வேண்டியது குறித்தும் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்த வேண்டியது கவலையளிக்கின்றது என அவர் தெரி வித்துள்ளார். பொலிஸாரின் நடவடி க்கைகள் கடந்த பல மாதங்களாக பல உயிர்களை பலியெடுத்துள்ளன இன்றும் அது இடம் பெற்றுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒரு பகுதிக்குள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளதையும் அவர் கள் அங்கிருந்து வெளியேற முடியாத தப்பமுடியாத நிலை காணப்படுவதை யும் வீடியோ காண்பித்துள்ளது. அவ் வாறான சூழ்நிலையிலும் பொலிஸார் சர்வதேச மனிதஉரிமை சட்டம் பலத்தை பயன்படுத்துவதற்கான தராத ரங்கள் ஆகியவற்றை மீறி நீர்த்தாரை பிரயோகம் கண்ணீர் புகைபிரயோகம் ஆகியவற்றை மேற்கொள்கின்றனர் என வும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைதியான ஆர்ப்பாட்டத்தில் பொது மக்களிற்கு எதிரான பரந்துபட்ட வன் முறைகள் இல்லாத போது கண்மூடித் தனமான விளைவுகளை கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத் தான ஆயுதங்களை பயன்படுத்தக் கூடாது எனவும் மன்னிப்புச்சபையின் ஆர்ப்பாட்டங்களிற்கான உரிமை தொடர் பிலான பிராந்திய ஆராய்ச்சியாளர் ஹரிந்திரினி கொரியா தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தின் சூழமைவில் இடம் பெற்றதாக குற்றம் சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் உயிரிழப்பு குறித்து பக்கச் சார்பற்ற விசாரணைகள் இடம் பெற வேண்டும் இவற்றிற்கு காரண மானவர்கள் நீதியின் முன்நிறுத்தப்பட வேண்டும் எனவும் சர்வதேச மன்னி ப்புச்சபை வேண்டுகோள் விடுத்து ள்ளது.

## பிரதமர் பதவியில் இருந்து விலகியது தவறு!



பிரதமர் பதவியை மீளப் பொறுப்பேற்கவுள்ளேன் என்று வெளிவரும் செய்தி தொடர்பில் கருத்துக் கூற நான் விரும்பவில்லை. நான் பிரதமர் பதவியிலிருந்து விலகியதே தவறு என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பிரதமராக மஹிந்தவை மீளவும் நியமிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவினர் வெளியிடும் கருத்துக்கள் தொடர்பில் மஹிந்த ராஜபக்சவிடம் கொழும்பு ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பி யிருந்தது. கடந்த வருடம் மே 9 ஆம் திகதி நாட்டின் நிலைமையைக் கருத்தில்கொண்டே பிரதமர் பதவியிலிருந்து விலகினேன். அந்தக் கசப்பான சம்பவத்தை மீள நினைவு படுத்த நான் விரும்பவில்லை.

மீண்டும் பிரதமர் பதவியை ஏற்கும் ஆசை எனக்கு இல்லை. எனினும், நாடாளுன்றத்தில் உள்ள பெரும்பான்மையான உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து மீண்டும் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்குமாறு என்னிடம் கோரிக்கை விடுத்தால் அது தொடர்பில் அந்த நேரம் தீர்க்கமான முடிவு எடுப்பேன் என் றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் சிலர். மஹிந்த ராஜபக்ஷவை விட்டு விலகும் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதற்கு காரணம் அந்த எம்.பி.க்கள் ஜனாதிபதியுடன் நெருங்கிய உறவை வைத்துக் கொள்ள ஆர்வமாக உள்ளனர். அவருக்கு மிக நெருக்கமான இரண்டு அல்லது மூன்று எம்.பி.க்கள் மட் டுமே தற்போது அவருக்கு நெருக்கமாக இருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## சிறிதளவும் English தெரியாமல் கனடா வந்த சிறுவன் எப்படி Top Student - ஆனார்?

இது எல்லோரும் வாசிக்க வேண்டிய வெற்றிக்கதை. வெற்றி பெற்ற மாணவனின் தாயார் தான் பெற்ற வெற்றி போல் ஏனைய தமிழ்ப் பெற்றோரும் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தன் கதையை இவ்வாறு கூறினார்:

நாங்கள் இலங்கையிலிருந்து கனடா வந்தபோது எங்களுடைய மகனுக்கு 3 வயது முடிந்து சில மாதங்கள் ஆகியிருந்தது. புதிய இடம், வித்தியாசமான சூழ்நிலை ஆகிய காரணங்களால் மகன் மற்றவர்களிடமிருந்து சிறிது ஒதுங்கியே இருந்தார். விளையாடுவதில் மட்டும் ஆர்வமாகவும் படிப்பதில் நாட்டம் இல்லாமலும் இருந்தார்.

தமிழ் மட்டுமே தெரிந்திருந்த காரணத்தாலும் ஆங்கிலம் சிறிதளவும் தெரியாதபடியாலும் பாடசாலை செல்லத் தயங்கினார். ஏனென்றால், அவரை Play School க்கோ Pre -School க்கோ அனுப்பக்கூடிய சந்தர்ப்பம் அமையவில்லை. அவரை வீட்டில் வைத்துப் படிப்பிப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தோம். ஆனால், மகன் ஆங்கிலம் எழுதுவதற்கும் படிப்பதற்கும் விரும்பவேயில்லை. பாடசாலை செல்ல 5 மாதங்கள் மட்டுமே இருந்ததால் மகனை எப்படித் தயார்படுத்துவது என்றுதெரியாமல் திணறினோம். அவரைப்பற்றி எங்களுக்கு மிகவும் கவலையாக இருந்தது.

நல்லவேளை, முன்பு எப்போதோ சில மாணவ, மாணவிகளின் வெற்றிக்கதைகள் பற்றிப் பேப்பரில் வந்த கட்டுரையை வாசித்த எனது சகோதரி அதைக் கவனமாக வெட்டி வைத்திருந்ததால், அவர் எனக்கு Haran Masterஐப் பற்றிக் கூறினார். அவர் பல வருடங்களாகக் கல்வி கற்பித்துவரும் நிறுவனமான Bright Start Early Reading Centre -இல் மகனை சேர்க்கும்படி கூறினார். அவ்வாறே நான் மே மாதம் Haran Master-ஐத் தொடர்புகொண்டு மகனின் உண்மையான நிலைமையையும் எங்களது கவலையையும் எடுத்துச் சொல்லி மகனை அவரிடம் படிக்கச் சேர்த்து விட்டோம்.

என்ன ஆச்சரியம்! Haran Master - இடம் போகத் தொடங்கி ஒரு சில வாரங்களிலேயே மகனின் படிப்பில் ஏற்பட்ட மாற்றத்தைப் பார்த்ததும் நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. பெரி..............ய மாற்றம்! எங்களுக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது.

Haran Master - இன் ஒரு பாரிய talent, சிறப்பு என்னவென்றால், அவர் பிள்ளைகளைக் கையாளும் விதம். அவர் படிப்பிக்கும் விதம். அவர் பெற்றோரையும் வகுப்பில் பின்னுக்கு இருக்க அனுமதிப்பதால் நாங்கள் இதை நேரில் காணக்கூடியதாக இருந்தது. அவர் வலு இலகுவாகப் பிள்ளைகளின் மனதைக் கவரும்படி படிப்பித்து அவர்களின் மனதில் ஒரு ஊக்கத்தையும், நல்ல ஆர்வத்தையும் ஏற்படுத்தி விடுகிறார். இதுதான் மகனுக்கும் நடந்தது.

முன்பு ஆங்கிலத்தை வெறுத்த மகன் Haran Master இடம் ஆங்கிலம் படிப்பதற்கு மிகவும் ஆசையுடனும் ஆர்வத்துடனும் போனார். மூன்று மாதங்கள் முடிவதற்குள் அவர் ஆங்கில எழுத்துக்களை எல்லாம் சரியான முறையில் அழகாக



எழுதப் படித்துவிட்டார். அதோடு, எழுத்துக்களின் ஒலியைச் சரியான முறையில் உச்சரிக்கவும் கற்று விட்டார். இந்த Phonics-ஐ Haran Master படிப்பிக்கும் முறையே தனி. இந்த letter Sounds - ஐப் படிப்பிக்க நாங்கள் முன்பு YouTube மூலம் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தோம். அதெல்லாம் மகனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் Haran Master - இன் கற்பிக்கும் முறையில் அவர் மிகவும் எளிதாகவும் ஆசையுடனும் கற்றுவிட்டார்.

செப்டம்பர்-இல் பாடசாலை தொடங்கியதும் மகன் எந்த ஒரு பயமும் இல்லாமல் ஆசையுடன் Kindergarten சென்றார். அதைப்பார்த்து நாங்கள் மிகவும் சந்தோஷப்பட்டோம். மற்றது, இப்பவும் மகன் Haran Master இடம் தொடர்ந்து படிக்கிறார். கிழமையில் ஒருநாள் மட்டும். Haran Master - இடம் போகும் நாள் எப்ப வரும் என்று காத்திருப்பார்.

அது மட்டுமல்ல, இன்னுமொரு வேடிக்கையான விஷயம் சொல்ல வேண்டும். Haran Master -இடம் தான் படித்ததை மகன் வீட்டில் வந்து எங்களுக்கு class நடத்துவார். சரியாக Haran Master படிப்பிக்கின்ற அதே பாணியிலேயே வீட்டிலிருக்கும் தாத்தா, பாட்டி, எங்களுக்கும் படிப்பிப்பார். Vowel Sounds எல்லாம் Haran Master மாதிரியே உதாரணங்களுடன் விளங்கப்படுத்துவார். இப்ப, தானாகப் புத்தகங்களை விரும்பி வாசிக்கத் தொடங்கி விட்டார். அவரது பாடசாலை ஆசிரியரும் அவரது ஆங்கிலத் தரத்தைப் பாராட்டி என்னிடம் புகழ்ந்து கூறினார்". அவர்தான் class -இல் Top student அவருடைய உச்சரிப்பு perfect and clear என்று மகிழ்ச்சி பொங்கக் கூறிய அந்தத் தாய், Haran Master ஐப் பற்றிப் பெரிதும் பாராட்டி தன் நன்றியை இவ்வாறு தெரிவித்தார்:

'எங்கள் அன்பான Haran Master இடம் எங்களை அனுப்பி வைத்த இறைவனுக்கு முதல் நன்றி. படிப்பில் ஆர்வமே இல்லாமல் இருந்த எங்களது மகனைச் சரியான நேரத்தில் நல்லபடி மாற்றிய Haran Master-க்கு பல கோடி நன்றி. அவருக்கு நாங்களும், தாத்தா, பாட்டி உட்பட எங்கள் குடும்பத்தினர் எல்லோரும் மகிழ்ச்சியுடன் கூடிய நன்றியை மனதாரத் தெரிவித்துக் கொள்கிறோம். அதோடு Haran Master -க்கு இறைவன் நல்லாசிகளை வழங்கி, அவரது சேவையில் மேன்மேலும் வளர இறைவனைப் பிரார்த்திக்கிறோம்' என்று உள்ளம் நிறைந்து கூறினார்.

Haran Master -இடம் நீங்களும் உங்கள் பிள்ளைகளை English, Math படிப்பதற்குச் சேர்க்க விரும்பினால், அல்லது அவரைப் பாராட்ட விரும்பினால், அவரை

**Bright Start Early Reading Centre**

(647)-290-5207 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கும் எம்மைப்போலவே வெற்றி நிச்சயம்!

# இந்திய மீனவர்களுக்கு அனுமதி! ரணில் அரசின் மற்றுமொரு சதி!

கட்டுரையாளர்:
ஈழநாட்டிற்காக
யாழ்ப்பாணத்தில் இருந்து
– பார்த்தீபன் –

தமிழக மீனவர்களுடன் இலங்கைத் தமிழ் மீனவர்களை மோதவிடுவதற்கான திட்டம் ஒன்றை வகுத்து ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் செயற்படுகின்றதா என்ற சந்தேகம் கடந்த வாரம் அரசியல் அரங்கில் இடம் பெறும் நிகழ்வுகளின் மூலமாக எழுந்திருக்கின்றது. பாராளுமன்றத்தில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இவ்வாறான திட்டம் இருப்பதை உறுதிப்படுத்தினார்.

வட கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்கான அனுமதி வழங்கப்படும் என வெளியான இந்த அறிவிப்பு இலங்கை மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது. அவ்வாறு வழங்குவதற்கு முன்னர் எமக்கு நஞ்சைத் தாருங்கள் என வடக்கிலுள்ள மீனவர் ஒருவர் அறிவிக்கும் அளவுக்கு வடபகுதி மீனவர்கள் மத்தியில் இந்த அறிவிப்பு அச்சத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இது தமது வாழ்வாதாரத்தை முற்றாகப் பறித்து விடும் என அவர்கள் தெரிவிப்பதில் நியாயமிருக்கின்றது. கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் தான் இந்தக் கருத்தை அவர்கள் முன்வைக்கின்றார்கள்.

இந்திய மீனவர்கள் வாரத்தில் இரண்டு நாட்களுக்கு இங்கு வந்தார்கள் என்றால் வடபகுதி கடல் அவர்களுடைய கட்டுப் பாட்டுக்குள் சென்று விடும். ஏனெனில் அவர்களிடம் பெருமளவு நாட்டுப் படகுகள் இருக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் எமது மீனவர்கள் கடலுக்குள் செல்ல முடியாது. இரண்டு நாட்களுக்கு அவர்கள் தமது தொழிலை இழப்பார்கள். இது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. எமது வளங்களை அவர்கள் அள்ளிக் கொண்டு செல்லும் நிலைதான் காணப்படும் என்று எச்சரிக்கின்றார் இவ்விடயம் தொடர்பில் செயற்பட்டுவரும் பேராசிரியர் சூசை ஆனந்தன்.



இலங்கையின் கடற்பகுதிக்குள் தினமும் 2000. 3000 இந்திய மீன்பிடிப் படகுகள் வரும் நிலையில் அவற்றை தடுக்க முடியாதுள்ளதாக எமது கடற் படையும் கூறுவதனாலேயே `லைசென்ஸ் ``முறை மூலம் அந்தப் படகுகளின் வருகையை கட்டுப்படுத்துவதுடன் இந்த ``லைசென்ஸ்`` மூலம் கிடைக்கும் பணத்தை அப்பகுதி மீனவர்களுக்கு பிரித்துக் கொடுக்கவும் கலந்துரையாடுகின்றோம் எனத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இழுவை மடி வலை மீன்பிடிக்கு ஒருபோதும் அனுமதி வழங்க மாட்டோம் எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை இந்தக் கருத்தை அமைச்சர் முன்வைத்தார் அமைச்சரின் உரையின் முக்கியமான பகுதிகள் வருமாறு

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு அண்மையில் வந்த போது கூட நாம் இதனைப் பற்றிப் பேசினோம். அதே போன்று வெளிவிவகார அமைச்சிலும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அதிகாரிகளை அழைத்தும் கலந்துரையாடினோம்..

இதில் ஒரு தெரிவாக தமிழக மீனவர்களுக்கு ``லைசென்ஸ்` ஒன்று கொடுக்க வேண்டும் என அவர்கள் கூறுகின்றனர். அப்படி ``லைசென்ஸ்`` கொடுப்பதென்றால் அவர்கள் எமது பகுதிக்குள் எவ்வளவு தூரத்திற்கு வரலாம் என்பது பற்றி நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றோம்.



அதனால் தான் நாம் இரு நாடுகளுக்கிடையில் நல்லதொரு கலந்துரையாடல் இடம் பெற்று ஒப்பந்தமொன்றுக்கு வர முடியுமானால் ``லைசென்ஸ் ``வழங்க முடியுமென்றால் இந்திய கடற்படை மூலம் தமிழக மீனவர்களை கட்டுப்படுத்த முடியும்` இவ்வாறு பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார் அதாவது இந்திய மீனவர்களுக்கு வடக்கு கடலில் மீன்பிடிக்க அனுமதிப்பது தொடர்பில் பேச்சுக்கள் இடம் பெறுவதை இதன் மூலமாக அவர் உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

எமது கடல் எல்லைக்குள் இந்திய சீன அல்லது எந்தவொரு வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளுக்கும் அனுமதி கொடுப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று தெரிவித்த தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட எம்.பி.சார்ள்ஸ் நிர்மலநாதன், எமது மீனவர்களின் பிரச்சினைக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நிரந்தர தீர்வை காண முடியாது எனவும் கூறினார்.

கடற்றொழில் தொடர்பில் குறிப்பிட்ட சில நாட்களாக குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வட பகுதி மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இது நாடு சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஆக்கர்வமான கலந்துரையாடலை நடத்த வேண்டும். மீனவ சமூகங்கள் இது தொடர்பில் கேட்கும் போது கடற்றொழில் அமைச்சர் மாறுபட்ட கருத்துக்களை தெரிவித்து செல்கின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

செல்வராஜா கஜேந்திரன் எம்.பி.யும் அரசாங்கத்தின் இந்த திட்டத்துக்கு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்திருக்கின்றார்..

ஒரு புறத்தில் வீழ்ந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் அதே வேளை நாட்டின் ஒருபகுதியாக வலுக்கட்டாயமாக 1948இல் இருந்து கையகப்படுத்தி வைத்துள்ள வடக்கு, கிழக்கு தமிழ்த் தேசிய பிரதேசத்தில் எங்களின் பொருளாதாரத்தை அழிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றீர்கள்.

வடக்கு கடலில் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கின்றோம். அவ்வாறு நடந்தால் அதற்கு எதிராக தமிழ்த் தேசிய மக்களை அணி திரட்டி போராடுவோம் என்று கஜேந்திரன் எச்சரித்திருக்கின்றார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக பேராசிரியர் சூசை ஆனந்தனிடம் கேட்ட போது அவர் தெரிவித்த தகவல்களை இங்கு தருகின்றோம்

இது நடைமுறைப்படுத்தப்படுமாளின் அது பாரதூரமான விளைவுகளைத் தான் வடபகுதி மீனவர்களுக்கு ஏற்படுத்தும். முதலாவதாக, இவ்வாறான உடன்படிக்கைகளைச் செய்யும் போது வடபகுதி மீனவர்களின் ஆலோசனைகளைப் பெற்று புத்திஜீவிகள், மற்றும் இதனுடன் தொடர்புபட்டவர்களுடன் கலந்தாலோசித்துத் தான் இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆனால், அரசாங்கம் தன்னிச்சையாக மேல்மட்டத்தில் உள்ள சிலரை இந்தியாவுக்கு அனுப்பி இது தொடா்பில் தீர்மானங்களை எடுப்பது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல. சர்வாதிகாரமான ஒரு முடிவாகத் தான் இதனை நாம் பார்க்கலாம்.

இப்போது, பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தியாவிடமிருந்து பெருமளவு உதவிகளை இலங்கை பெற்றிருக்கின்றது. இதனால், அவர்கள் கேட்கும் அனைத்தையும் கொடுப்பதாக இலங்கையின் நிலை வந்துவிட்டது என்று பேராசிரியர் சூசைஆனந்தன் குற்றஞ்சாட்டுகின்றார்.

போரினால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் மீனவர்கள் தான் என்று தெரிவிக்கும் பேராசிரியர் இப்போது அரசாங்கம் முன்னெடுக்கும் இந்தச் செயற்பாட்டினால் சுமார் இரண்டு இலட்சம் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்படப் போகின்றார்கள் என்று சுட்டிக்காட்டுகின்றார். வடபகுதியிலுள்ள கடல் மிகவும் சிறியது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் சுமார் இரண்டு இலட்சம் மீனவர்கள் இந்தக் கடலை நம்பித் தான் இருக்கின்றார்கள். அவர்களுடைய வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்குவதாக இந்த லைசன்ஸ் முறை அமையப் போகின்றது எனவும் எச்சரிக்கின்றார்

எமது மீனவர்களுக்கு தென்பகுதிக் கடலுக்குச் செல்வதற்கு முடியாது. அந்தப் பக்கத்தில் அனுமதிக்க மாட்டார்கள். அதேபோல ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கான வசதிகளும் எம்மிடம் இல்லை. ஏனெனில் அதற்கான முதலீடுகள், அதற்கான வசதிகள், அதற்கான பயற்சிகள், துறைமுகங்கள் என எதுவுமே எம்மிடம் இல்லை. அதனால், ஆழ் கடல் மீன்பிடிக்கும் எமது மீனவர்கள் பெருமளவுக்குச் செல்ல முடியாதிருக்கின்றார்கள். வடமராட்சியில் ஒரு சிலர் ஆழ்கடல் மீன்பிடிக்குச் சென்றாலும் 90 வீதமானவர்கள் ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்ல முடியாதவர்களாகத் தான் இருக்கின்றார்கள் என்ற தகவல்களையும் பேராசிரியர் தெரிவித்தார்.

இப்போதும் கூட வாரத்தில் மூன்று நாட்கள் அவர்கள் அத்துமீறி எமது கடல் எல்லைக்குள் வருகின்றார்கள். இந்தக் காலப்பகுதியில் எமது மீனவர்கள் தொழிலுக்குச் செல்ல முடியாத ஒரு சூழ்நிலை தான் இருக்கின்றது. இதனால், எமது வளங்கள் அபகரிக்கப்படுகின்றன. இது மட்டுமல்ல, சூழல் பாதிக்கப்படுகின்றது. எமது மீனவர்களின் வலைகள் அறுக்கப்படுகின்றன. மீனவர்களிடையே மோதல்கள் ஏற்படுகின்றது. கடந்த வாரத்தில் கூட கடற்பகுதியில் ஒரு வாள்வெட்டுச் சம்பவம் நடைபெற்றிருக்கின்றது.

இந்த நிலையில், இப்போது இந்திய மீனவர்களுக்கு வாரத்தில் இரண்டு நாட்களுக்கு வடபகுதிக் கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதிப்பது தொடர்பாக ஆராயப்படுகின்றது. நாட்டுப் படகுகளுக்கு அனுமதிப்பதாகச் சொல்லப்படுகின்றது. இவற்றில் பயன்படுத்தப்படும் வலைகள் தங்கூசி வலைகளாகும். தங்கூசி வலைகள் இலங்கையில் தடை செய்யப்பட்டிருக்கின்றது. இழுவை வலையும் தடை செய்யப்பட்டிருக்கு. தங்கூசி வலையும் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

அவர்கள் இரண்டு நாட்களுக்கு இங்கு வந்தார்கள் என்றால் வடபகுதி அவர்களுடைய கட்டுப்பாட்டுக்குள் சென்று விடும். ஏனெனில் அவர்களிடம் பெருமளவு நாட்டுப் படகுகள் இருக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் வடபகுதி மீனவர்கள் கடலுக்குள் செல்ல முடியாது. இரண்டு நாட்களுக்கு அவர்கள் தமது தொழிலை இழப்பார்கள் என்றும் எச்சரிக்கும் பேராசிரியர் தெரிவித்த மற்றொரு தகவல் அதிர்ச்சியளிப்பதாக இருந்தது.

இந்தியாவிலிருந்து தினசரி மூவாயிரத்துக்கும் அதிகமான படகுகள் வருகின்றன. வந்து எங்களுடைய வளங்களை அவர்கள் அள்ளிக் கொண்டு செல்கின்றார்கள். உதாரணமாக ஒரு நாளைக்கு ஒரு ட்ரோலரில் கொண்டு செல்லப்படுகின்ற இறால், கடலட்டை, நண்டு, கணவாய், மீன் என்பனவற்றின் பெறுதி இந்திய ரூபாவில் குறைந்தது 50 ஆயிரம் ரூபா என மதிப்பிடப்படுகின்றது.

ஒரு நாளைக்கு ஒரு படகில் இவ்வளவு வளங்கள் கொண்டு செல்லப்படுகின்றது என்றால், ஒரு நாளைக்கு வரும் 3 ஆயிரத்துக்கும் அதிகமான படகுகளில் எவ்வளவு வளங்கள் கொண்டு செல்லப்படுகின்றன என்று கணக்கு பாருங்கள். வாரத்தில் மூன்று நாள். மாதத்தில் 12 நாட்கள். எமது வளங்கள் இவ்வாறு மூவாயிரத்துக்கும் (18ம் பக்கம் பார்க்க)

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மார்ச் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக. தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும்.

ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

24 பெப்ரவரி 2023 முதல்03 மார்ச் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதரவோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி துஷியந்தி நவநாதன்

யாழ்.கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 08 மார்ச் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு, பாரதி, செஞ்சோலை ஆகிய மூன்று இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி துஷியந்தி நவநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 11வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி

நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 11வது ஆண்டு நினைவு நாள் 03 மார்ச் வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நாகரெத்தினம் இராஜதுரை

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களுடைய இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 27 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 9வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவபாக்கியம் இராமலிங்கம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவபாக்கியம் இராமலிங்கம் அவர்களின் ஒன்பதாவது ஆண்டு நினைவு தினம் 27 பெப்ரவரி 2023 திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள் திருமதி சிவபாக்கியம் இராமலிங்கம் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம்நாள் நினைஞ்சலி



### திருமதி சரஸ்வதி சிவசங்கரப்பிள்ளை

சங்கானை தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் மிஸிசாகா கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரஸ்வதி சிவசங்கரப்பிள்ளை அவர்களின் 31ம்நாள் நினைவு தினம் 08 மார்ச் 2023 புதன்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திருமதி சரஸ்வதி சிவசங்கரப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 24வது ஆண்டு நினைவஞ்சலி

### திருமதி மார்க்கண்டு மனோன்மணி
### திரு செல்லர் மார்க்கண்டு



யாழ்ப்பாணம் சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு மனோன்மணி அவர் களது 24வது ஆண்டு நினைவு நாள் 10 மார்ச் 2023 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் தந்தையார் திரு செல்லர் மார்க்கண்டு அவர்களது நினைவையும் சேர்த்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். தாய், தந்தையரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



24 பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி புஸ்பராஜ் சியாமளா தம்பதிகளின் செல்வப்புதல்வி காயத்திரி புஸ்பராஜ் அவர்களின் பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி காயத்திரி தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



25 பெப்ரவரி 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் T.K. பரமேஸ்வரன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் T.K. பரமேஸ்வரன அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



27 பெப்ரவரி 2023 திங்கட்கிழமை கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி நாகரெத்தினம் இராஜதுரை அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



27 பெப்ரவரி 2023 திங்கட்கிழமை நயினாதீவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவபாக்கியம் இராமலிங்கம் அவர்களது 9வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




28 பெப்ரவரி 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு சிவா ஆனந்தஜோதி குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்



03 மார்ச் 2023 வெள்ளிக்கிழமை நாவலர்மடம் நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி அவர்களது 11வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



தெரியாத ஒருத்தர கல்யாணம் பண்ணச் சொல்லி வற்புறுத்தும் கல்யாண தரகர்களிடம் உங்கள் நேரத்தையும், காசையும் வீணாக்காதீர்கள்!

புதிதாக அறிமுகம் செய்யும் 'தமிங்கிள்' தனியாக வாழ்பவர்களை சந்தித்து மகிழ்ச்சியுடன் பேசி பழக உதவும் ஒரு உச்சக் கட்ட தமிழ் டேட்டிங் அனுபவம்.

உங்கள் மனதிற்கு பிடித்தவர்களுடன் நமது 'குக் ஞ மிங்கிள்' நிகழ்ச்சியில் ஒரு கொண்டாட்டம் செய்வதை நினைத்து பாருங்கள்,

அங்கே நமது சமையல்காரர் ஒரு அறுசுவையான ஆட்டுக் கறி எப்படி சமைப்பது என்று அருமையாகச் சொல்லிக் கொடுப்பார்.

நமது *@Tamingle.dates* இன்ஸ்டாகிராம் பக்கத்திற்கு சென்று டொராண்டோ பூராகவும் நடக்கவிருக்கும் நம் நிகழ்ச்சிகளில் உங்களுக்கு பிடித்த நிகழ்ச்சிக்கு இப்பொழுதே டிக்கட் வாங்கிக் கொள்ளுங்கள்.

அத்துடன் நாம் உங்கள் அடையாளத்தை இரகசியமாக பேணுவோம் நாம் எப்பொழுதும் நமது பங்கேற்பாளர்களின் புகைப்படங்களை காட்சிப்படுத்த மாட்டோம்.

எதற்காக சலிப்பு தரும் நிச்சிய திருமணத்திற்கு ஒப்புக் கொள்கிறீர்கள்? தமிங்கிள் மூலமாக உங்கள் காதல் வாழ்க்கையை இப்பொழுதே அழகாக்கிக் கொள்ளுங்கள்!

**அடுத்த நிகழ்ச்சி — மார்ச் 23, 2023**

**@ East Town Banquet Hall**




Don't waste any more time and money on marriage brokers who fail to deliver results and pressure your son/daughter into marrying a stranger!

Introducing Tamingle - the ultimate Tamil dating experience that will have you meeting and mingling with other singles in a fun and interactive way.

Imagine cooking up a storm with a potential match at our Cook & Mingle event, where a chef will teach you how to make delicious Mutton Curry together!

Check out our Instagram page @Tamingle.dates to see the list of upcoming events all over Toronto, and purchase your tickets to the ones that catch your eye.

Plus, we respect your privacy - Tamingle doesn't publicly display photos of our participants, so you can rest easy knowing that your personal life remains private.

So why settle for a boring arranged marriage? Spice up your dating life with Tamingle!

**Next Event: March 23, 2023**

**@ East Town Banquet Hall**

# மின் வெட்டும் இல்லை! தேர்தலும் இல்லை!

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



கடந்த 16ஆம் திகதியிலிருந்து மின் வெட்டு நிறுத்தப்பட்டு விட்டது. ஆனால் மின்கட்டணம் 66 விகிதத்தால் அதிகரித்திருக்கிறது. இதன் மூலம் அரசாங்கம் மக்களுக்கு உணர்த்த விரும்புவது எதனை? மின் வெட்டை நிறுத்துவது என்றால் நீங்கள் மின் கட்டண உயர்வை தாங்கிக் கொள்ள வேண்டும். இதை அதன் பிரயோக அர்த்தத்தில் கூறின், மின் கட்டணத்தை குறைப்பது என்றால் மின்சாரத்தை குறைவாக நுகருங்கள் என்பது தான்.

இப்படி ஓர் உத்தியைத் தான் எரிபொருள் விநியோகத்திலும் அரசாங்கம் அறிமுகப்படுத்தியது. கியூ ஆர் கோட் முறைமை என்பது எரிபொருள் நுகர்வைக் கட்டுப்படுத்தியது. எரிபொருள் பதுக்கப்படுவதையும் தேவைக்கும் அதிகமாக நுகரப்படுவதையும் அது ஒப்பீட்டளவில் கட்டுப்படுத்தியது. அதன் விளைவாக வெளியே போகும் டொலர்களின் எண்ணிக்கையும் குறைக்கப் பட்டது. இப்பொழுது மின் கட்டணம் உயர்ந்திருக்கிறது. ஆனால் மின் கட்டண உயர்வினால் அதிகம் பாதிக்கப்படுவது ஏழைகள் தான் என்பது சுட்டிக்காட்டப்படுகிறது.

அதிகளவு மின்சாரத்தை நுகரும் பணக்காரர்களுக்கு ஏற்கனவே கட்டணம் உயர்ந்து விட்டது. ஆனால் ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட மின் அலகுகளைப் பயன்படுத்தும் கீழ் மத்தியதர வர்க்கத்தை சேர்ந்தவர்கள் தான் இப்புதிய மின் கட்டண உயர்வால் பாதிப்படைபவர்கள் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. அரசாங்கம் தந்திரமான முறையில் மானியத்தை வெட்டுகிறது என்றும் எடுத்துக் கொள்ளலாமா?

ஏனெனில் கடந்த இருபதாம் திகதி கண்டியில் உரையாற்றும் பொழுது ஜனாதிபதி அதை வெளிப்படையாகக பின்வருமாறு கூறியிருந்தார்....சர்வ தேச நாணய நிதியத்துடன் அரசு கடந்த ஒகஸ்ற் மாதம் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தது. அதன்படி, செப்டெம்பரில் அதிகாரிகள் மட்டத்தில் உடன்பாடு காண முடிந்தது. அவர்கள் எமக்கு நடைமுறைப்படுத்த பதினைந்து விடயங்களைக் முன் வைத்தார்கள்.

டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன் அவற்றை நடைமுறைப்படுத்த சர்வதேச நாணய நிதியம் கால அவகாசம் வழங்கியது. ஆனால், அன்று அதைச் செய்யமுடியவில்லை. பின்னர் ஜனவரி 31ஆம் திகதி வரை அவகாசம் பெற நடவடிக்கை எடுத் தோம். அப்போதும் அந்த 15 விடயங்களை எங்களால் பூர்த்தி செய்ய முடியவில்லை. இறுதியாக பெப்ரவரி 15 ஆம் திகதிவரை கால அவகாசம் நீடிக்கப்பட்டது. பெப்ரவரி 15 ஆம் திகதி மாலை 6.00 மணிக்குள் அனைத்து விடயங்களையும் நிறைவேற்றி வாஷிங்டனுக்கு அனுப்பினோம்...''

அதாவது.ஐ.எம்.எ.ஃப்பின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வது அல்லது நிறைவேற்றுவது என்ற ஒரே இலட்சியத்தை நோக்கி அவர் உழைக்கிறார் என்பது அந்த உரையில் தெரிகிறது. ஐ.எம்.எ.ஃப் என்ன கேட்கும்? மானியங்களை வெட்டு தனியார்மயப்படுத்து வரிகளை உயர்த்து ஆட்குறைப்பைச் செய்...போன்ற விடயங்களைத் தானே? அரசாங்கம் ஐ.எம்.எ.ஃப்பின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படியத் தொடங்கி விட்டது. இதன் மூலம் வரும் மார்ச் மாதமளவில் ஐஎம்எ.ஃபிடமிருந்து உதவி கிடைக்கலாம் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. ஆனால் அது ஒரு சிறிய தொகை.அதன் மூலம் கடனை அடைக்க முடியாது. எனினும், அது நாட்டின் கடன் வாங்கும் தகைமையை அங்கீகரிக்கும் ஓர் உதவியாக அமையும். இதை இன்னும் கூரான வார்த்தைகளில் சொன்னால் பிச்சை எடுப்பதற்கான தகைமையை அது அதிகப்படுத்தும்.



இவ்வாறு பிச்சை எடுத்து பொருளாதாரத்தை ஒரு கட்டத்துக்கு மேல் நிமிர்த்தி விட்டால்.அதன் விளைவாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெறலாம் என்று ரணில் விக்கிரமசிங்க நம்புகிறார். ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு நடத்த வேண்டும்.அதனால் தான் உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் பின்னடிக்கின்றதா? வடிவேலுவின் பகிடியில் வருவது போல உள்ளூராட்சி சபைத் தேர்தல் வரும் ஆனால் வராது என்ற நிலை தான் காணப்படுகிறது. பெரும்பாலும் ஒரு ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. பொருளாதாரத்தை ஓரளவுக்கு நிமிர்த்தினால், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணிலை விட்டால் வேறு தெரிவு நாட்டுக்கு இருக்காது.


சஜித் பிரேமதாச தன்னுடைய தலைமைத்துவத்தை இதுவரையிலும் நிரூபித்திருக்கவில்லை. ஜேவிபி ஒரு பிரதான நீரோட்ட கட்சியாக மேலெழுமா என்பதனை இனிவரும் தேர்தலே தீர்மானிக்கும். எனினும் பொருளாதாரத்தை நிமிர்த்தும் சக்தி ரணிலுக்கு உண்டு என்று நிரூபிக்கப்பட்டால் அவர் தான் அடுத்த ஜனாதிபதி.

கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவோடு அவருடைய அதிகாரம் மேலும் கூடியிருக்கிறது. அரசியலமைப்பின் 70(1)அ.உறுப்புரையின்படி நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் இப்பொழுது அவருக்கு உண்டு. இதை அதன் விளைவுகளின் அடிப்படையில் கூறின், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வகிக்கும் தாமரை மொட்டுக் கட்சி இனி ரணிலுக்கு மேலும் கீழ்ப்படிவாக மாறும். அதாவது ரணில் மேலும் பலமடைந்திருக்கிறார் என்று பொருள்.

இப்படியாக ரணில், ஒப்பீட்டளவில் பலமடைந்து வரும் ஒரு சூழலில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தினால் அது சில வேலை அரசியல் ஸ்திரத்தன்மையைக் குழப்பக் கூடும். உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுகள் பெரும்பாலும் தாமரை மொட்டு கட்சிக்கு பாதகமாக வரலாம் என்ற எதிர்பார்ப்பு உண்டு.

கடந்த பொதுத் தேர்தலில் தாமரை மொட்டுக் கட்சி பெற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை காலாவதியாகி விட்டது என்பதனை தேர்தல் நிரூபிக்கக்கூடும். அது நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையைக் குழப்பும். அரசியல் ஸ்திரத்தன்மை இல்லையென்றால் பொருளாதாரத்தை நிமிர்த்துவது கடினம். அரசியல் ஸ்திரத்தன்மை இல்லையென்றால் ஐ.எம்.எ.ஃப் போன்ற மேற்கத்திய நிதி அமைப்புக்கள் உதவப்பின்னடிக்கும். எனவே அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேண வேண்டும். அதற்கு உள்ளூராட்சி சபை தேர்தலை வைப்பது புத்திசாலித்தனமல்ல.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழும். உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் உள்ளூர் நிலவரங்களை பிரதிபலிப்பவை. அவை தேசிய அளவில் கட்சிகளின் வெற்றி தோல்விகளை காட்டுமா? என்று.உண்மை தான். உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் உள்ளூரில் காணப்படும் சாதி, சமயம், தனிப்பட்ட செல்வாக்கு போன்ற அம்சங்களைப் பிரதிபலிக்கின்றன. ஆனாலும் இறுதியிலும் இறுதியாக கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகளை தேசிய மட்டத்தில் கணிக்கும் போது அங்கே அது கட்சிகளின் வெற்றி தோல்வியாகவும் வியாக்கியானம் செய்யப்படும்.




இப்படி ஒரு நிலைமை 2015ல் ரணில் – மைத்திரி அரசாங்கம் உருவாகிய பின் ஏற்பட்டது.2015 தேர்தலில் ரணில் – மைத்திரி கூட்டு வெற்றி பெற்ற பின் நடந்த கூட்டுறவு சபைகளுக்கான தேர்தலில் மஹிந்த அணி வெற்றி பெற்றது. அது உள்ளூர்ப் பண்புமிக்க ஒரு வெற்றி தான். எனினும் அதைக் கண்டு பயந்த ரணில் – மைத்திரி கூட்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை கிட்டத்தட்ட 20 மாதங்களுக்கு ஒத்தி வைத்தது. அவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட தேர்தல்கள் 2018ல் நடந்த போது அதில் மகிந்த அணி பெரு வெற்றி பெற்றது.

அதன் மூலம் ரணில் மைத்திரி கூட்டு பெற்ற வெற்றி காலாவதியாகி விட்டது என்பது நிரூபிக்கப்பட்டது. அதன் விளைவாக மைத்திரி தனது விசுவாசத்தை இடம் மாற்றிக் கொண்டார். ஒரு யாப்புச் சதிப்புரட்சியில் ஈடுபட்டார்.

எனவே உள்ளூராட்சி தேர்தல்கள் உள்ளூர் பண்பு அதிகமுடைய முடிவுகளை வெளிக் கொண்டு வந்தாலும், அவை தேசிய அளவில் கட்சிகளுக்கு உரிய வெற்றி தோல்வியாகவே கணிக்கப்பட முடியும். இந்த அடிப்படையில் சிந்தித்தால் தாமரை மொட்டுக்கு மக்கள் ஆணை உண்டா இல்லையா? சஜித்தின் உயரம் எவ்வளவு? ஜே.வி.பியின் உயரம் எவ்வளவு? என்பவற்றை நிரூபிக்கக் கூடிய ஒரு உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயங்கும் என்பதே உண்மை.

பதிலாக பொருளாதாரத்தை குறிப்பிடத்தக்க அளவுக்கு நிமிர்த்திய பின் அல்லது ஆகக் குறைந்த பட்சம் ஐஎம்எ.ஃபிடமிருந்து உதவியைப் பெற்ற பின்பு அதை ஒரு வெற்றியாகக் காட்டி தேர்தல்களை வைப்பது அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதிகம் பாதுகாப்பானது. ஜனாதிபதி ஐ.எம்.எஃப்பிடமிருந்து கிடைக்கக் கூடிய உதவிகளைக் குறித்து கடந்த பல மாதங்களாக கட்டியெழுப்பி வரும் பிம்பமானது அதைத் தான் காட்டுகிறது.

அவர் ஒற்றை யானையாக நாடாளுமன்றத்துக்கு வந்த பொழுதே அதாவது ராஜபக்சக்களின் காலத்திலேயே தனது முதல் உரையில் ஐ.எம்.எ.ஃப் பிடம் போங்கள் என்று சொன்னார். இப்பொழுதும் அதைத் தான் சொல்கிறார் செய்கிறார். ஐ.எம்.எ.ஃப்பை ஒரு சர்வரோக நிவாரணியாக அவர் உருவகித்து வருகிறார். அதன் மூலம் ஐ.எம்.எ.ஃபிடமிருந்து உதவிகளை வெற்றிகரமாகப் பெற முடிந்தால் அதை ஒரு சாதனையாகக் காட்டி அவர் வாக்குகளைத் திரட்ட முயற்சிக்கலாம்.

ஆனால் இங்குள்ள கேள்வி என்னவென்றால், ஜனாதிபதி எதிர்பார்ப்பது போல அடுத்த ஆண்டுக்குள் பொருளாதாரத்தை ஓரளவுக்குச் சரிக் கட்டலாமா என்பதுதான். ஏனெனில், இலங்கையைப் போன்று பொருளாதார நெருக்கடிக்குள் வீழ்ந்த கிரேக்கத்தில் ஐந்து ஆண்டுகளுக்குள் எழு தடவைகள் அரசாங்கம் மாறியது. அர்ஜென்டினாவில் ஐந்து தடவைகள் அரசாங்கம் மாறியது. ஐந்து தடவைகள் நிதியமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள்.இலங்கையில்?

# மேலோங்குகிறதா மத அடிப்படைவாதம்?

அண்மைக் காலத்தில் இந்தியாவில் ஆட்சியில் உள்ள பா.ஜ.க. மற்றும், அதனுடன் நேரடியாக, மறைமுகமாக உறவுகளை வைத்திருக்கும், இந்து மத அரசியல் பிரமுகர்கள் அதிகளவில் இலங்கைக்கு வரத் தொடங்கியிருக்கின்றனர்.

குறிப்பாக, வடக்கிற்கு அவர்கள் வருகை தருகின்றனர். யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையில் இப்போது விமானப் போக்குவரத்துத் தொடங்கி விட்டதால், அவர்களுக்கு வந்து போவது வசதியாகி விட்டது. யாழ்ப்பாண கலாசார நிலையத்தைக் கையளிக்கும் விழாவுக்காக பா.ஜ.க. அரசாங்கத்தில் மத்திய இணை அமைச்சராக இருக்கும் எல்.முருகன் மற்றும் அண்ணாமலை போன்றோரும் இலங்கைக்கு வந்து சென்றனர்.

அதன் பின்னர் திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரி விழாவில் பங்கேற்க, இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜீன் சம்பத் வந்திருந்தார். இவர்கள், இங்கு வந்தும், அங்கு திரும்பிச் சென்றும், தமிழ் மக்கள் தொடர்பாக அவர்களின் அபிலாசைகள் தொடர்பாக வெளிப்படுத்தும் கருத்துக்கள் சர்ச்சைக்குரியனவாக உள்ளன.

தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை, அண்மைக் காலத்தில் இரண்டு முறை யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். அவர் கடைசிப் பயணத்துக்குப் பின், தமிழகத்துக்குத் திரும்பிய பின்னர், இலங்கைத் தமிழர்கள் 13ஆவது திருத்தத்தை தீர்வாக ஏற்றுக் கொள்கின்றனர் என்றும், அதனை நடைமுறைப்படுத்துவதை விரும்புகின்றனர் என்றும் கூறியிருந்தார்.

அவரது இந்தக் கருத்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பலவீனப் படுத்தும் நோக்குடையது. ஏனென்றால், 13ஆவது திருத்தச் சட்டம் என்பது தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான ஆரம்பப் புள்ளியாகக் கூட இல்லை என்பதே தமிழ் மக்கள் மற்றும் தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாடாக உள்ளது.

ஏனென்றால், 13ஆவது திருத்தச்சட்டம், மாகாண சபைகளை உருவாக்குவதற்காக கொண்டு வரப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டது போல, லண்டன் மாநகராட்சிக்கு உள்ள அதிகாரங்கள் கூட, இந்த மாகாண சபைகளுக்குக் கிடையாது. அவ்வாறான மாகாண சபை முறையை தமிழ் மக்களால் எவ்வாறு, தங்களின் பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக் கொள்ள முடியும் என்ற கேள்வி இருக்கிறது.

13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப் பட்ட போதே, தமிழ் மக்கள், தமிழ் அரசியல் கட்சிகள், விடுதலை இயக்கங்கள் அதனை எதிர்த்தன. அந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தில், அது உருவாக்கப்பட்ட போது இருந்த அதிகாரங்கள் இப்போது இல்லை. அதிலிருந்த குறைந்த பட்ச அதிகாரங்கள் கூட பிழிந்தெடுக்கப்பட்டு, வெறும் சக்கையானதொரு கட்டமைப்பு தான் இப்போது எஞ்சியிருக்கிறது. இதனை தமிழ் மக்கள் தங்களின் பிரச்சினைக்கான தீர்வாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான் இந்தியாவின் நிலைப்பாடு. இந்தியா அதனை பலமுறை கூறி விட்டது.

அதற்கு அப்பால் தமிழர்களுக்கு அதிகாரம் கிடைக்க வேண்டும் என்று இந்தியா எதிர் பார்க்கவும் இல்லை, கிடைப்பதை இந்தியா விரும்பவும் இல்லை என்பது தான் உண்மை. 13ஆவது திருத்தம் தான் தீர்வு என்று கூறும் இந்தியாவுக்கு, அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கும் பலம் இருந்தாலும் அதனை 37 ஆண்டுகளாக செய்யவில்லை. விடுதலைப் புலிகள் இருந்த வரைக்கும், அவர்கள் தடையாக இருந்தனர் என்ற காரணம் கூறப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னரும், 14 ஆண்டுகள் ஆகி விட்டன. ஆனாலும் இந்தியாவினால், 13ஆவது திருத்தம் என்ற தீர்வைக் கூட நடைமுறைப் படுத்த முடியவில்லை. இது இந்தியாவின் பலவீனம். இவ்வாறான நிலையில் வடக்கின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் 'ஓட்டைப் பாத்திரம்' என்று குறிப்பிட்ட மாகாணசபையைத் தான், தமிழர்கள் தீர்வாக ஏற்கின்றனர் என்ற கருத்தை தமிழகத்தில் பரப்ப முனைகிறது பா.ஜ.க. தமிழ்நாட்டில் பா.ஜ.க. தன் செல்வாக்கை பரப்புவதற்கு இப்போது இலங்கையில் உள்ள தமிழர்களைப் பயன்படுத்த முற்படுகிறது.



இங்குள்ள தமிழர்களைப் பகடைக்காய் ஆக்க முயற்சிக்கிறது. பா.ஜ.க.வைப் போல தமிழ்நாட்டில் உள்ள இந்துமத அடிப்படைவாத கட்சியான இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜஜீன் சம்பத், இலங்கையில் மத அடிப்படைவாதம் தீவிரமடைந்து வருவதாக ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

அவர் குறிப்பிட்டது பௌத்த மத அடிப்படைவாதம் பற்றியல்ல. அவர் கிறிஸ்தவ, இஸ்லாமிய அடிப்படைவாதத்தையே குற்றவாளிக் கூட்டில் நிறுத்த முயன்றிருக்கிறார். இலங்கையில் பௌத்த மதம் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

அந்த வரலாறு, அண்ணாமலைக்கோ, அர்ஜஜீன் சம்பத்துக்கோ தெரியவில்லை. பௌத்த மத பீடங்களை மீறி ஆட்சியாளர்களால் எதையும் செய்து விட முடியாது. அந்தளவுக்கு பௌத்த பீடங்கள் கடிவாளத்தை தங்களின் கையில் வைத்திருக்கின்றன. இலங்கையின் ஆட்சியாளர்களும் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றுகின்ற, விருப்பத்தைப் புரிந்து கொண்டு நடந்து கொள்பவர் அதற்குகளாகவே இருக்கின்றனர்.

13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த அனுமதிக்க முடியாது என பௌத்த பீடங்கள் கடிதம் கொடுத்த பின்னர், ரணில் விக்கிரமசிங்க அது பற்றி பேசுவதை தவிர்த்து பெட்டிப் பாம்பாக அடங்கி விட்டார். இது தெரியாமல், தமிழகத்தில் இருந்து வந்தவர்கள், 13 ஆவது திருத்தம் தான் தீர்வு என்றும், அதனையே தமிழர்கள் விரும்புகிறார்கள் என்றும் மாயையை உருவாக்க முனைகின்றனர்.

தமிழ் மக்களுக்கு தீர்வு எதுவும் கிடைத்து விடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் பௌத்த பீடங்களின் மதவாதம், இந்தியாவின் இந்துமத அடிப்படைவாதக் கட்சிகளுக்குத் தெரிவதில்லை. ஏனென்றால், பௌத்தமும், இந்து மதத்தின் ஒரு பிரிவு என்றே அவர்கள் கருதுகிறார்கள்.

பௌத்த மத அடிப்படைவாதத்தை அவர்கள் கண்டிக்கவோ எதிர்க்கவோ தயாராக இல்லை. அவ்வாறு செய்வது தங்களின் கண்ணை தாங்களே குத்திக் கொள்வதாக இருக்கும் என்பது அவர்களின் நிலைப்பாடு.

அதேவேளை, விடுதலைப் புலிகளுக்குப் பின்னரான காலப்பகுதியில், வடக்கு, கிழக்கில் மத அடிப்படைவாதம், பிரதேச அடிப்படைவாதம், சாதிய அடிப்படைவாதம் என்பன தீவிரமடைந்து வருகின்றன என்பது வெளிப்படை.

தமிழ்த் தேசியம் என்ற ஒரே குடையின் கீழ் இருந்த மக்களை, தனித்தனிக் கூறுகளாகப் பிரித்து பலவீனப்படுத்துகின்ற உத்தி இது. முன்னர் வெள்ளையர்கள் பிரித்தாளும் சூழ்ச்சியை கையாண்டனர் என்று வரலாறு கூறுகிறது.

அதே சூழ்ச்சி இப்போது தமிழர்களுக்கு எதிராக கையாளப்படுகிறது. தமிழர்களைப் பிரித்தாளும் இந்தச் சூழ்ச்சிக்கு தமிழினம், ஏற்கனவே பலியாகி விட்டது. கிழக்கில் இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து குற்றம் சாட்டும் போது, மன்னாரில் கிறிஸ்தவ மத அடிப்படைவாதம் தீவிரமடைவது குறித்துக் குற்றம் சாட்டும் போது வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வரும், இந்துமத அடிப்படைவாதம் பற்றி யாரும் பேசுவதில்லை. சிவ பூமியான யாழ்ப்பாணத்துக்கு, இந்து மதத்தை சாராத ஒருவர் மாவட்ட அரசாங்க அதிபராக வரக்கூடாது என்று போராட்டம் நடத்தியது மத அடிப்படைவாதம் தான்.

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள பௌத்தர்கள், அதிகாரம் செலுத்துவதை எதிர்க்காத இந்து மத அடிப்படைவாதம், கிறிஸ்தவர்களுக்கு எதிராக போராட்டம் நடத்துவது வேடிக்கை. யாழ். மாநகர முதல்வராக இந்து மதத்தை சேர்ந்த ஒருவரே வரவேண்டும் என்றும், சைவ வேட்பாளருக்கே ஆதரவளிக்க வேண்டும் என்றும் கோருகின்ற சிவசேனையை ஊக்குவிப்பதே இந்தியாவின் மத அடிப்படைவாத சக்திகள் தான்.

அண்மையில் இங்கு வந்து சென்ற அண்ணாமலையும், முருகனும் சிவ சேனைக்கு தங்களின் ஆதரவு இருக்கும் என்று கூறியிருந்தமை குறிப்பிடத் தக்கது. தமிழர்களை மத அடையாளங்களின் ஊடாகப் பிளவுபடுத்தி, அதன் ஊடாக அரசியல் வியாபாரம் செய்ய முனைகின்றன இந்தியாவின் இந்துமத அடிப்படைவாத சக்திகள். அதற்கு துணை போகும் வகையில் பலிக்கடா ஆகிக் கொண்டிருக்கின்றன இங்குள்ள சில கட்சிகள். இந்த விடயத்தை தமிழர் தரப்பிலுள்ளவர்கள், சரியாகப் புரிந்து கொண்டு, இப்போதே விழிப்படையாது போனால் அதன் பலனை எமது மக்கள் விரைவிலேயே அனுபவிக்கும் நிலை ஏற்படும்.

## சி.ஐ.ஏ தலைவரின் வருகை:-

(21ம் பக்கம் பார்க்க)வில்லியம் ஜே பேர்ன்ஸ் (*William J Burns*) என்று தெரிய வந்திருக்கிறது. அவர் சி.ஐ.ஏ. உயர் அதிகாரிகளுடன் ஒரு சிறப்பு விமானத்திலும், மற்றொரு விமானத்தில் அதிநவீன கருவிகள் பொருத்தப்பட்ட வாகனங்களும் எடுத்து வரப்பட்டிருந்ததாக கூறப்படுகிறது. கொழும்பில் இருந்து இவர்கள், 15ஆம் திகதி புறப்பட்டு, நேபாளம் சென்று 18 மணித்தியாலங்கள் தங்கியிருக்க திட்டமிட்டிருந்தனர். எனினும், நேபாள அரசாங்கம் குறுகிய நேரத்தில் சி.ஐ.ஏ. தலைவரின் பயணத்துக்கு அனுமதி வழங்கவில்லை என்று காத் மண்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

சி.ஐ.ஏ. தலைவரின் இலங்கைப் பய ணம் குறித்து அரசாங்கம் இந்தப் பத்தி எழுதப்படும் வரை மூச்சுக் கூட விடவில்லை. சி.ஐ.ஏ. தலைவர் வில்லியம் ஜே பேர்ன்ஸ், இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி களுக்கு சீனா தான் காரணம் என்று பகிரங்கமாக கடந்த ஆண்டு குற்றம் சாட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறான சூழ்நிலையில், அமெரிக்கத் தரப்பின் பயணம் தொடர்பாக எழுகின்ற கேள்விகளும், அரசாங்கம் நடந்து கொள்ளும் முறையும், சந்தேக ங்களை ஏற்படுத்தக் கூடிய தொன்று தான். இந்த நிலையில், திருகோண மலையில் தளம் அமைப்பது குறித்த பேச்சுக்களை அமெரிக்கா முன்னெடுக் கிறதா என்பதில் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. ஏனென்றால், இப் போது, அமெரிக்கா தளங்களை அமைப்பதில் அதிக கவனம் செலுத்தவில்லை. உலகெங்கும் பல படைத் தளங்களை அமெரிக்கா கொண்டிருந்தாலும், இப்போது, அது, அணுகல் மையங்களை அமைப்பதில் தான் கவனம் செலுத்துகிறது. இலங்கையின் முக்கிய தளங்களை தேவைக்குப் பயன்படுத்தக் கூடிய வசதிகளை ஏற்படுத்துவது தான் அதன் இலக்கு. நல்லாட்சிக் காலத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை அவ்வாறான நோக்கத்துக்கு அமெரிக்கா பயன் படுத்த ஆரம்பித்தது.

நல்லாட்சி அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் அதில் இடையூறு ஏற்பட்டது. அண்மையில் பிலிப்பைன்ஸில் ஐந்து தளங்களைப் பயன்படுத்துவதற்கு அமெரிக்கா உடன்பாடு செய்து கொண்டிருக்கிறது. அது போலத் தான் இலங்கையிலும் தங்களின் படைகள் அணுகல் தளங்களை வைத்திரு க்க அமெரிக்கா விரும்பக் கூடும். திருகோணமலையாகவோ, கட்டு நாயக்கவாகவோ அல்லது வேறெந்த தளமாகவோ இருக்கலாம். அது எதுவாக இருந்தாலும், இலங்கையைக் கையாளும் விடயத்தில் அமெரிக்க அணுகு முறையில் அத்தகைய முயற்சிகள் நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

# சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான தவறான புரிதல்கள்?

தமிழ் மக்களுக்கான அரசியல் தலை தீர்மானிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு (*Referendum*) நடத்தப்பட வேண்டுமென்று சிலர் கூறி வருகின்றனர். அண்மையில் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்கள் மேற்கொண்ட பேரணியின் றுதியிலும் இவ்வாறானதொரு கோரிக்கையே முன் வைக்கப்பட்டது. இது அரசியலில் நுனிப்புல் மேயும் பிரச்சினை. தமிழ்ச் சூழலில் தங்களைப் படித்தவர்களென்று கருதிக் கொள்ளும் அரசியல்வாதிகளுக்கே விடயங்கள் சரியாக விளங்காத போது, பல்கலைக்கழக மாணவர்களால் எவ்வாறு இந்த விடயங்களை புரிந்து கொள்ள முடியும்? பல்கலைக்கழக மாணவர்களுக்கு அறிவுரை கூறுவோரும் கூட அவர்களை தவறாக வழி நடத்தியிருக்கலாம்.

இவ்வாறான பேரணிகளின் போது முன் வைக்கப்படும் கோசங்கள், இறுதியில் அந்தப் பேரணிகளின் பெறுமதியையே இல்லாமலாக்கி விடுகின்றது. யாழ். பல்கலைக்கழக மாணவர்களது உழைப்பு பொதுசன வாக்கெடுப்பு தொடர்பில் முன் வைக்கப்பட்ட கோரிக்கையால் பயனற்றுப் போனது.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டியென்னும் பெயரில் இடம் பெற்ற பேரணிக்கும் இதுதான் நடந்தது. எதிர்காலத்திலும் இவ்வாறான பேரணிகள் இறுதியில் விழலுக்கிறைத்த நீராகவே கடந்து போகும். அவைகளை முன்னெடுப்பவர்கள் சரியானவர்களால் வழிகாட்டப்படவில்லையாயின் தொடர்ந்தும் இதுதான் கதையாக இருக்கும்.

சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான கோரிக்கையானது, அது பற்றி பேசபவர்களின் சொந்த புத்தியிலிருந்து வரவில்லை. அது ஒரு இறக்குமதி செய்யப்பட்ட கோரிக்கை. எப்போது கோரிக்கைகள் இறக்குமதி செய்யப்படுகின்றனவோ, அப்போது அதன் மீதான அறிவு ரீதியான பார்வை இல்லாமல் போய்விடும்.

இந்தக் கட்டுரை, சர்வஜன வாக்கெடுப்பு கோரிக்கையை அறிவு ரீதியாக ஆராய முற்படுகின்றது. ஆங்கிலத்தில் ரிபரெண்டம் (*Referendum*) என்று அழைக்கப்படும் சர்வஜன வாக்கெடுப்பானது, ஒரு குறிப்பிட்ட விடயத்திற்காக மக்களின் அபிப்பிராயத்தைக் கோரும் நோக்கில் மேற்கொள்ளப்படும் சட்டபூர்வமான நடவடிக்கையாகும். இதனை ஜனநாயகமென்றும் அழைப்பர். இதனை ஒரு நாட்டின் அரசாங்கமே நடத்த முடியும்.

அதாவது, ரிபரெண்டம் என்பது சட்ட ரீதியானது. சட்டத்திற்கு முரணாக இடம் பெறும் எந்தவொரு மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்புகளும் ரிபரெண்டமென்னும் வரையறைக்குள் அடங்காது. சட்டத்திற்கு முரணாக இடம்பெறும் வாக்கெடுப்புகள் *Plebis cite* என்னும் ஆங்கிலச் சொல்லின் வழியாகவே நோக்கப்படும்.

அதாவது, மக்கள் தங்களின் அபிப்பிராயத்தை தெரிவித்திருக்கின்றனர். ஆனால் அதற்கு சட்ட ரீதியான வலு இல்லை. இலங்கையின் வரலாற்றில் ரிபரெண்டம் என்னும் சொல் நமக்கு இரண்டு சந்தர்ப்பங்களில் அறிமுகமாகியிருக்கின்றது. ஒன்று, 1982இல் ஜே.ஆர்.ஜெயவர்தன அரசாங்கத்தின் காலத்தை நீடித்துக் கொள்வதற்காக பொதுசன வாக்கெடுப்பை நடத்தினார். தேர்தலை நடத்தினால், நாடு நக்சலைட்டுகளின் கட்டுப்பாட்டுக்குள் சென்று விடும் ஆபத்துண்டதென்னும் காரணத்தை முன்வைத்தே, பொதுசன வாக்கெடுப்பை நடத்தினார். ஜே.ஆரின் நிலைப்பாட்டிற்கு ஆதரவாக 54 வீதமான மக்கள் வாக்களித்தனர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ரிபரெண்டம் நமக்கு இரண்டாவது தடவையாக அறிமுகமானது. வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒரு நிர்வாக அலகாக இருக்க வேண்டுமென்னும் தமிழர்கள் அரசியல் கோரிக்கையை சட்டரீதியாக அங்கீகரிப்பதாயின், கிழக்கு மாகாணத்தில் ரிபரெண்டம் நடத்தப்பட வேண்டுமென்று, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ,ந்த அடிப்படையில் ஜே.ஆர். ஜெயவர்தன, செப்டெம்பர் 1988 இல் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரு நிர்வாக அலகாக பிரகடனம் செய்தார். நவம்பர் மாதத்தில் இணைந்த வட-



கிழக்கு மாகாணத்திற்கான தேர்தல் இடம்பெற்றது. வரதராஜப்பெருமாள் முதலமைச்சரானார்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி டிசம்பர் 31, 1988 இல் அல்லது அதற்கு முன்பதாக கிழக்கு மாகாணத்தில் ரிபரெண்டம் நடத்தப்பட வேண்டும். ஆனால் அது நடத்தப்படவில்லை. ஒப்பந்தத்தின்படி, ரிபரெண்டத்தை தனது சுயவிருப்பின் பெயரில் ஜனாதிபதி பிற்போட முடியும். அவ்வாறானதொரு ரிபரெண்டம் இடம் பெறாமலேயே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் 18 வருடங்களாக ஒரு நிர்வாக அலகாக இருந்தது. 2006இல் ஜே.வி.பி. இணைப்பிற்கு எதிராக வழக்கொன்றை தாக்கல் செய்து, இணைப்பின் சட்டபூர்வ தன்மையை கேள்விக்குள்ளாக்கியது. இதனைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனி நிர்வாக அலகாகின. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி கிழக்கு மாகாணத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பு இடம் பெற்றால் அது ரிபரெண்டம் என்றே அழைக்கப்படும்.

ஏனெனில், அது சட்டரீதியானது. இதனைக் கோருவதற்கு தமிழ் மக்களுக்கு இப்போதும் உரிமையுண்டு. ஆனால் இதிலுள்ள நடைமுறைச் சிக்கல், அவ்வாறானதொரு ரிபரெண்டம் இடம் பெற்றால் கிழக்கில் தமிழர்கள் தோல்வியடைவார்கள்.

ஏனெனில் அதனை முஸ்லிம்களும் சிங்களவர்களும் ஆதரிக்கப் போவதில்லை. இன்றைய சூழலில் தமிழர்களின் ஒரு பகுதியினர், ஆதரிப்பார்களா என்னும் கேள்வியுமுண்டு. ஆனால் ஒருவேளை 1988இல் அவ்வாறானதொரு ரிபரெண்டம் இடம் பெற்றிருந்தால், தமிழர்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பிருந்தது. ஏனெனில் அன்றிருந்த சூழலில், முஸ்லிம்கள் அதனை எதிர்ப்பதற்கான வாய்ப்பு பெருமெடுப்பில் இருந்திருக்கவில்லை.

இன்று சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் பேசுவது முற்றிலும் வேறானது. ஏனெனில் இது அடிப்படையில், தமிழ் மக்கள் தங்களின் அரசியல் தலைவிதியை தீர்மானிப்பதற்கான சுதந்திர வாக்கெடுப்பு பற்றியது. ஆரம்பத்தில் இது பற்றி உருத்திரகுமாரன் தலைமையிலான நாடு கடந்த அரசாங்கம் மட்டுமே பேசி வந்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவை தளமாகக் கொண்டிருக்கும் சில புலம்பெயர் அமைப்புகளும் இப்போது பேசுகின்றன. இவர்களது செல்வாக்கின் காரணமாகவே வடக்கிலும் சிலர் இது பற்றி பேசி வருகின்றனர். இவர்களது செல்வாக்கிற்குட்பட்ட சிவில் சமூக பிரதிநிதிகள் சிலரும் இதனை அவ்வப்போது உச்சரிக்கின்றனர். ஒன்றை விரும்புவது என்பது வேறு, அதனை சரியாக புரிந்து கொண்டு விரும்புவது என்பது வேறு. ஒரு விடயத்தை சரியாக புரிந்து கொள்ள முற்படும் போது விருப்பங்கள் இரண்டாம் பட்சமாகி யதார்த்தங்களே முன்னுரிமை பெறும். யதார்த்தங்கள் ஒரு வேளை கசப்பானதாக இருந்தாலும் கூட அதுதான் இறுதியில் வெற்றி பெறும்.

தமிழ் சூழலில் சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் பேசுவோர் முதலில் தங்களுக்குள் கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்வி, நீங்கள் யாரிடம் அந்த வாக்கெடுப்பை கோருகின்றீர்கள்? ஒரு வாக்கெடுப்பை அரசாங்கம் மட்டுமே நடத்த முடியும். அவ்வாறாயின் இலங்கை அரசாங்கத்திடமா நீங்கள் வாக்கெடுப்பை கோருகின்றீர்கள்? 13 ஆவது திருத்தச் சட்டத்தையே முழுமையாக அமுல்படுத்த முடியாதவொரு சூழலில் ரிபரெண்டம் ஒன்றை கொழும்பிடம் எவ்வாறு கோரமுடியும்?

அடுத்தது பிறிதொரு நாடு தமிழர்களுக்காக ரிபரெண்டத்தை கோர முடியுமா? அதற்கான வாய்ப்புகள் என்ன? நிச்சயமாக எந்தவொரு வாய்ப்பும் இல்லை. உண்மையில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கோரப்பட்ட கிழக்கு மாகாணத்திற்கான ரிபரெண்டம் அரிதானதொரு நிகழ்வாகும். ஏனெனில், இந்திய- இலங்கை ஒப்பந்தத்தில் ரிபரெண்டம் உள்ளடக்கப்பட்டதை, அப்போது, முக்கிய இந்திய தலைவராக இருந்த வி.பி.சிங் விமர்சித்திருந்தார்.

இந்தியாவிலேயே ரிபரெண்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளாத போது, எவ்வாறு பிறிதொரு நாட்டில் அதனை நீங்கள் கோரலாமென்று அவர் கேள்வியெழுப்பியிருந்தார். எனினும் ஜனநாயக ரீதியில் கிழக்கு, வடக்குடன் இணைவதற்கான ஏற்பாட்டை ராஜீவ் காந்தி ஆதரித்திருந்தார். ராஜீவ் கொலையைத் தொடர்ந்து, வி.பி.சிங் இந்தியாவின் பிரதமரானார்.

வி.பி.சிங் கூறியது முற்றிலும் சரியானது. ஏனெனில், காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைக்கான ரிபரெண்டத்தை 1949 லிருந்து இந்தியா எதிர்த்து வருகின்றது. ஐ.நா. பரிந்துரைத்தும் இந்தியா அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

காஷ்மீர் சுயநிர்ணய கோரிக்கையை பாகிஸ்தானே தூண்டி வருகின்றது. பிராந்திய அரசியல் பின்புலத்தில் நோக்கினால் ஈழத் தமிழர்களுக்கான ரிபரெண்டக் கோரிக்கையை இந்தியாவினால் ஆதரிக்கவே முடியாது. இந்த பின்புலத்தில் நோக்கினால், இந்த விடயத்தில், பிராந்திய ரீதியான ஆதரவும் ஈழத் தமிழர்களுக்கு இல்லை. அடுத்து சர்வதேச ரீதியானது. சர்வதேச ரீதியாக நோக்கினால் இதுவரையில் ரிபரெண்டமென்னும் பெயரில் இடம் பெற்ற வாக்கெடுப்புகள் எவையுமே உண்மையான ரிபரெண்டங்கள் இல்லை. தமிழ் சூழலில் விடயங்கள் தவறாக முன் வைக்கப்படுகின்றன.

ரிபரெண்டம் தொடர்பில் பேசுவோர் விடயங்களை நேர்மையாக முன் வைப்பதில்லை. ஒருவேளை அவர்களுக்கு விடயங்கள் தெரியாமலும் இருக்கலாம். உதாரணமாக கேட்லோனியாவில் இடம்பெற்ற வாக்கெடுப்பு தொடர்பில் தமிழ்ச் சூழலில் சிலர் பேசுவதுண்டு.


கட்டுரையாளர்:

தாயகத்தில் இருந்து

- யசீந்திரா -




இந்த விடயங்கள் அனைத்துமே புலம் பெயர் அமைப்புகள் சிலவற்றால் தான் இறக்குமதி செய்யப்பட்டது. இதனை அரைகுறையாக விளங்கிக் கொண்டு நமது சூழலிலும் சிலர் பேசுவதுண்டு.

கேட்டலோனியாவின் பிரச்சினை வேறு, ஈழத் தமிழர்களின் பிரச்சினை வேறு. ஸ்பெயின் 17 சுயாதீன பிராந்தியங்களைக் கொண்டிருக்கின்றது. இதில் ஒரு பிராந்தியம் தான் கேட்டலோனியா. உதாரணமாக இந்தியாவில் தமிழ்நாடு இருப்பது போன்று. ஸ்பெயின் ஏனைய பிராந்தியங்களோடு ஒப்பிட்டால், கேட்டலோனியா, பொருளாதார ரீதியில் வளமான பகுதியாக இருக்கின்றது. .இந்த பின்புலத்தில், கேட்டலோனியாவை ஒரு தனிநாடாக்க வேண்டுமென்னும் கோரிக்கை அங்குள்ள அரசியல் சமூகத்திடமுண்டு. இந்த அடிப்படையில் தான், 2017இல் கேட்டலோனியா பாராளுமன்றத்தில், சுயநிர்ணயத்திற்கான சுதந்திர வாக்கெடுப்பை நடத்துவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனையே நம்மவர்கள் சிலர் கேட்டலோனியாவிற்கான ரிபரெண்டமென்று கூறினர். உண்மையில் இது ரிபரெண்டம் அல்ல.

ஏனெனில், ஸ்பெயினின் அரசியல் சாசன நீதிமன்றம் இந்த வாக்கெடுப்பை நிராகரித்து விட்டது. எனவே கேட்டலோனியாவிற்கான வாக்கெடுப்பை கேட்டலோனிய பாராளுமன்றம் ரிபரெண்டமென்றுகூறிய போதிலும் கூட, அதனை ஸ்பெயின் நிராகரித்து விட்டது. இந்த அனுபவத்திலிருந்து ஒரு விடயத்தை நம்மவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

அதாவது, ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பை நடத்துவதாக இருந்தால் கூட முதலில், ஒரு நிர்வாகக் கட்டமைப்பு கட்டாயமானது. அந்த நிர்வாகக் கட்டமைப்பு ஒப்பீட்டடிப்படையில் பலமானதாகவும் இருக்க வேண்டும். அடுத்தது, அந்த நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும் வாக்கெடுப்பானது, சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட வேண்டும். இவைகளை ஈழத் தமிழர்களால் எவ்வாறு சாத்தியப்படுத்த முடியும்? இப்போது ரிபரெண்டமென்று உச்சரிப்பவர்களால் இதனை எவ்வாறு முன்னெடுக்க முடியும்?

இன்னொரு முக்கியமான விடயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். சில புலம்பெயர் அமைப்புகள் மேற்குலக அனுபவங்களிலிருந்து மட்டுமே விடயங்களை நோக்குகின்றன. அவர்களிடம் பிராந்திய அரசியல் சூழல் தொடர்பில் தெளிவான புரிதல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த தவறிலிருந்தும் தான், ரிபரெண்டம் தொடர்பான (18ம் பக்கம் பார்க்க)

# சோனியா காந்தி:- "எனது இன்னிங்ஸ் முடிந்தது"

கட்டுரையாளர்:
– ஆலோக் பிரகாஷ் –

2017 டிசம்பரில் நடந்த விஷயம் இது. ராகுல்காந்தி காங்கிரஸ் கட்சியின் தலைவராக முடிசூட்டப்பட இருந்தார்.

ராகுல் காந்தி கட்சியின் தலைவராக முடிசூட்டப் பட்டால் உங்கள் பங்கு என்னவாக இருக்கும் என்று ஒரு நாள் முன்னதாக நாடாளுமன்ற வளாகத்திற்கு வெளியே செய்தியாளர்கள் சோனியா காந்தியிடம் கேட்டனர்.

நான் ஓய்வு பெறப்போகிறேன் என்று சோனியா பதில் அளித்தார். இப்போது ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு, சோனியா காந்தியின் 'ஓய்வு' பற்றிய விவாதம் மீண்டும் தொடங்கியுள்ளது.

ராய்ப்பூரில் சனிக்கிழமை (பிப். 25) நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் 85வது அமர்வில், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி, '1998-ஆம் ஆண்டு காங்கிரஸ் தலைவராக நான் பொறுப்பேற்றது எனக்கு பெருமிதம் அளிக்கும் விஷயம்' என்று கூறினார். 25 ஆண்டுகளில் கட்சி பல பெரிய சாதனைகளைப் படைத்தது, ஏமாற்றங்களும் இருந்தன என்றார் அவர்.

2004 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் எங்களின் வெற்றியுடன் கூடவே டாக்டர் மன்மோகன் சிங்கின் திறமையான தலைமை எனக்கு தனிப்பட்ட திருப்தியை அளித்தது. ஆனால், காங்கிரசுக்கு திருப்புமுனையாக அமைந்த 'பாரத் ஜோடோ யாத்திரையுடன்' எனது இன்னிங்ஸ் முடிந்தது என்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது' என்று சோனியா காந்தி கூறினார்.

சோனியா காந்தியின் இந்த உரையைத் தவிர, மாநாட்டு அரங்கில் அவரது பதவிக்காலம் குறித்த படமும் திரையிடப்பட்டது.

சனிக்கிழமை நடைபெற்ற காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் சோனியா காந்தி அரசியலில் இருந்து ஓய்வு பெறுவது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை என்பது உண்மை தான். காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து விலகும் அறிக்கையை 'பாரத் ஜோடோ யாத்திரை'யின் பின்னணியில் அவர் வெளியிட்டுள்ளார்.

ஆனால் காங்கிரஸ் கட்சியின் மாநாட்டில் அவர் பேசியது ராய்ப்பூரில் இருந்து டெல்லி வரை விவாதத்தில் உள்ளது.

காங்கிரஸ்காரர்கள் அதை ஏற்க மாட்டார்கள். ஆனால், கட்சியின் செயல் தலைவர் நாற்காலியில் இருந்து விலகி மல்லிகார்ஜுன கார்கேயை கட்சித் தலைவராக்கியதன் மூலம் சோனியா காந்தி தனது அரசியல் இன்னிங்ஸை முடித்துக்கொண்டு ஓய்வு பெற்றுள்ளார். அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சிறந்த தலைவராக அவர் இருந்தார். கண்ணியமான முறையில் முடிவுகளை எடுத்தவர் அவர். தனது இன்னிங்ஸ் முடிவதான இன்றைய அவருடைய உரை, ஒரு பொது அறிவிப்பு போன்றது.'' என்று ராய்ப்பூரின் மூத்த செய்தியாளர் சுனில் குமார் குறிப்பிட்டார்.

### மிகநீண்ட பதவிக்காலம்

இந்த ஆண்டு ராஜஸ்தான், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சட்டப்பேரவை தேர்தல்களும், அடுத்த ஆண்டு நாட்டில் மக்களவைத் தேர்தலும் நடைபெற உள்ள நிலையில் சோனியா காந்தியின் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

இவ்வாறான நிலையில் எதிர்வரும் நாட்களில் அவரின் பங்கு தொடர்பான இயல்பான விவாதம் ஆரம்பமாகியுள்ளது. காங்கிரஸ் கட்சியின் வரலாற்றிலேயே மிக நீண்ட காலமாக 19 ஆண்டுகள் காங்கிரஸ் தலைவராக பதவி வகித்த சோனியா காந்தி, 2004ல் தனக்கு பதிலாக மன்மோகன் சிங்கை பிரதமராக்க முன் முயற்சி எடுத்தார். கட்சி அவரது முடிவுகளை அரசில் செயல்படுத்தியது. இன்றும் இந்த அரசு வரலாற்று ரீதியாக



முக்கியமானதாக கருதப்படுகிறது.

அவர் தலைவராக இருந்த போது, வேலைவாய்ப்பு உறுதித் திட்டம், உணவு உரிமை, கல்வி உரிமை, தகவல் அறியும் உரிமை போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்திய அரசியலுக்கு இவை ஒரு புதிய திசையை அளித்தன. மேலும் அவர் தலைவராக இருந்தபோது, நாட்டில் முதல் முறையாக பெண் குடியரசுத் தலைவராக பிரதீபா தேவி பாட்டீலும், முதல் தலித் பெண் மக்களவை சபாநாயகராக மீரா குமாரும் பதவியில் அமர்த்தப்பட்டனர்.

பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதாவும் இவரது பதவிக்காலத்தில் கொண்டு வரப்பட்டது.

76 வயதான சோனியா காந்தியின் செயல்பாடு, வயது மற்றும் உடல்நிலை காரணமாக கடந்த சில ஆண்டுகளாக குறைந்துள்ளது. ஆனால், இன்றைய உரைக்குப்பிறகு, ஒருபுறம் காங்கிரஸ் கட்சியை தனது நிழலிலிருந்து விடுவிக்க சோனியா காந்தி விரும்புவதாகவும் மறுபுறம் வயதான காங்கிரஸ்காரர்களுக்கு சிக்னல் கொடுக்க விரும்புவதாகவும் அரசியல் வட்டாரத்தில் நம்பப்படுகிறது.

சத்தீஸ்கரில் நடந்து வரும் மாநாட்டில் காங்கிரஸ் கட்சி, தனது அரசியலமைப்பில் ஒரு பெரிய திருத்தத்தை சனிக்கிழமையன்று செய்துள்ளது. காங்கிரஸ் காரிய கமிட்டி உறுப்பினர்களில் 50 சதவிகித பதவிகள் இடஒதுக்கீடு மூலம் நிரப்பப்படும் என அக்கட்சி முடிவு செய்துள்ளது.

எஸ்சி-எஸ்டி, ஓபிசி, பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு 50 சத விகித இட ஒதுக்கீடு வழங்க காங்கிரஸ் கட்சி முடிவு செய்துள்ளது. கட்சியில் 50 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மற்றும் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்படும் என்றும் கட்சி கூறியது.

ராகுல் காந்தி அவ்வப்போது கூறி வரும் 'இளைஞர் காங்கிரஸ்' என்ற கோஷத்திற்கு சோனியா காந்தி, தனது பங்குபணியை முடித்துக் கொள்ளும் அறிகுறியை அளித்துக் ஊக்கம் அளித்திருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சோனியா காந்தியின் சமீபத்திய அறிக்கை அவர் தீவிர அரசியலில் இருந்து விலகுவதற்கான அறிகுறியாக இருப்பதாக காங்கிரஸ் கட்சியின் சில தலைவர்களும் கருதுகின்றனர். சோனியாகாந்தி, தீவிர அரசியலில் இருந்து பிரிந்து செல்வதற்கான அறிகுறிகளை அளித்துள்ளதாக காங்கிரஸ் தலைவர் சந்தீப் தீட்சித் கருதுகிறார். அமைப்பு மற்றும் அன்றாட கட்சிப் பணிகளில் இருந்து விலகி இருப்பது பற்றி அவர் பேசியுள்ளார். ஆனால், அனுபவம் வாய்ந்த எந்த தலைவருக்கும் இருக்கும் மற்ற பணி, எதிர்க் கட்சிகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவது மற்றும் கட்சிக்குள் உள்ள பிரச்னைகளை தீர்ப்பது.

ஒருவேளை அவர் அந்த வேலையில் தீவிரமாக இருப்பார் என்பது காங்கிரஸ் காரர்களின் எதிர்பார்ப்பு.'' என்று அவர் கூறினார்.

மறுபுறம், சோனியா காந்தியின் வார்த்தைகளை ஓய்வுடன் இணைப்பது சரியல்ல என்று காங்கிரஸ் கட்சியின் பல தலைவர்கள் நம்புகிறார்கள். தீவிர அரசியலில் இருந்து சோனியா காந்தி ஓய்வு பெறுவதை காங்கிரஸ் தலைவர் அகிலேஷ் பிரதாப் சிங் முற்றிலுமாக நிராகரித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் அல்லது முன்னாள் பிரதமர், செயற்குழுவில் இடம் பெறுவார்கள் என்று கட்சியின் அரசியல் சாசனத்தில் இன்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது. சோனியா தேசியத் தலைவராக இருந்துள்ளார். காங்கிரஸ் கட்சியின் பணிக்குழுவில் அவர் நீடிப்பார். இவ்வாறான சூழ்நிலையில் அவரது ஓய்வு பற்றிய பேச்சு மிகவும் விசித்திரமானது. தலைவர் பதவிக்காலம் முடிவடைந்தது குறித்து அவர் பேசியுள்ளார்.'' என்று அவர் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் தலைவரும் சத்தீஸ்கரின் பொறுப்பாளருமான குமாரி ஷெல்ஜாவும் சோனியாகாந்தியின் சமீபத்திய உரையை அவரது ஓய்வுடன் இணைப்பதில் ஆதரவாக இல்லை.

செய்தியாளர்களிடம் பேசிய அவர், 'இதை நீங்கள் சரியான சூழலில் பார்க்க வேண்டும். சோனியா எங்கள் தலைவராக இருந்தார். இன்று கட்சிக்கு புதிய தலைவர் உள்ளார். சோனியா அவர்கள் தனது பதவிக்காலம் பற்றி பேசினார். புதிய தலைவரும் வழிகாட்டுதலை கோரியுள்ளார். எனவே, இந்தப்பேச்சை திரித்துக் கூறுவது சரி என்று எனக்குத் தோன்றவில்லை, என்றார்.

சோனியா காந்தி வெளியிட்ட அறிக்கையின் அரசியல் அர்த்தம் எதுவாக இருந்தாலும், சனிக்கிழமையின் உரைக்குப் பிறகு கட்சியில் அவரது பாத்திரம் இப்போது மாறப் போகிறது என்று ஊகிக்கப்படுகிறது.

இந்திய அரசியலில் ஓய்வு பெறும் மரபு இல்லை. இத்தகைய சூழ்நிலையில் காங்கிரஸ் கட்சியிலும் இந்திய அரசியலிலும் சோனியாகாந்தி எந்த மாதிரியான பங்கு வகிக்கப் போகிறார் என்பதைப் பார்ப்பது சுவாரசியமாக இருக்கும்.

நன்றி:- பிபிசி

## அமெரிக்காவின் உயர் பாதுகாப்புக்

(19ம் பக்கத் தொடர்ச்சி) வருகிறது. அதானி குழுமத்திற்கு எதிரான நகர்வுகளை அடுத்து இரு நாட்டுக்குமான நெருக்கம் குறைந்து வருவதுடன், இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஒன்றினை அமெரிக்கா உருவாக்க விரும்புகிறது. பாரதீய ஜனதாக் கட்சியின் தோல்வியையும் காங்கிரஸின் ஆட்சியையும் அமெரிக்கா கட்டமைக்கும் நகர்வுகளை மேற்கொள்ள முனைகிறது.

அதன் பிரதிபலிப்பானது இலங்கைத்தீவில் இந்திய-அமெரிக்க கூட்டென்பதை விட அமெரிக்கா தனித்து செயல்பட முனைகிறது. நேரடியாகவே அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் இலங்கைத்தீவின் அரசியலை கொண்டுவர அமெரிக்கா விரும்புகிறது. அதற்கு பிரதான காரணம் இந்தியாவின் இலங்கை பொறுத்த கொள்கைகளின் தோல்விகள். அதனால் சீனாவின் கை ஓங்கியுள்ளமை. அது மட்டுமன்றி அமெரிக்க நலனுக்குப் புறம்பான இந்திய நகர்வுகள். இதனால் ரஷ்ய - சீன - இந்திய அணுகுமுறையை தோற்கடிப்பதற்காக உக்ரைன் - தாய்வான் போன்று இலங்கைத்தீவையும் பயன்படுத்த முயல்கிறது.

எனவே அமெரிக்க உயர் பாதுகாப்புக் குழுவின் இலங்கை விஜயம் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. அது பற்றிய அதிர்வுகள் நீண்ட காலத்திற்கானது. இரு நாடுகளது நலன்களுடனும் சங்கமிக்கும் நடவடிக்கையாகவே தெரிகிறது. ஆனால் அமெரிக்காவின் இந்து சமுத்திரம் பொறுத்த கொள்கையும் பிராந்திய பாதுகாப்பும் இலங்கைத்தீவின் இறையாண்மையிலும் ஒருமைப்பாட்டிலும் கடற் பாதுகாப்பிலும் தங்கியுள்ளது என்பதை கோடுகாட்டியுள்ளது. இது ஈழத்தமிழருக்குரிய புரிதலுக்கானதாகும்.

## சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான....

(17ம் பக்கத் தொடர்ச்சி) தவறான புரிதல்கள் எழுகின்றன. ஐரோப்பிய அரசியல் பின்புலத்தில் இடம் பெறும் விடயங்களை தெற்காசிய அரசியல் சூழலுக்குள் பயன்படுத்த முடியாது. தெற்காசிய அனுபவங்களிலிருந்து தான் விடயங்களை நோக்க வேண்டும்.

ஐரோப்பிய சூழலில் பல ரிபரெண்டங்கள் டம் பெற்றிருக்கின்றன. கிழக்குதீமோர், குர்திஷ், கொசோவா, தென்சூடான் - இவ்வாறு பல நாடுகளில் ரிபரெண்டங்கள் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் அவற்றின் அரசியல் பின்புலமும் பிராந்திய உலகளாவிய அரசியல் தாக்கங்களும் முற்றிலும் வேறானது. அவற்றை ஒரு அனுபவமாக ஈழத் தமிழர்கள் கொள்ள முடியாது. மேற்குறிப்பிட்ட நாடுகள் அனைத்துமே ஒரு அதிகாரக் கட்டமைப்பை கொண்டே சுயநிர்ணயத்திற்கான ரிபரெண்டத்தை கோரின. ஆனால் நமது சூழலில் சிலரால் கோரப்படும் ரிபரெண்டம் வெறுங்கை ரிபரெண்டம். எதுவுமில்லை, ஆனால் எல்லாமும் இருப்பதான கற்பனையிலிருந்து சிந்திப்பது. அடிப்படையில் து ஒரு அரசியல் நோய். இந்த நோய்க்கு அறிவுள்ள தரப்பு மருந்திட வேண்டும். இல்லாவிட்டால் இந்த நோய் அனைவரையும் தொற்றிக் கொள்ளும்.

## இந்திய மீனவர்களுக்கு அனுமதி!

(9ம் பக்கத் தொடர்ச்சி)அதிகமான படகுகளில் அபகரிக்கப்படுகின்றன என்ற தகவலையும் பேராசிரியர் சூசைஆனந்தன் தெரிவித்தார். தமிழக மீனவர்களுடன் ஈழத் தமிழ் மீனவர்களை மோத விடுவதற்கான சதி வலையை ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் திட்டமிட்ட முறையில் பின்னியிருக்கின்றது. தமிழ்த் தலைமைகள் இந்த இடத்தில் உஷாராக செயற் படாவிட்டால் ஆபத்தான நிலைமைகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கும்.

# அமெரிக்காவின் உயர் பாதுகாப்புக் குழுவின் வருகை ஒரு மென் இராணுவ நகர்வாகக் கொள்ளலாமா?





இலங்கையின் உள்நாட்டுப் பொருளாதார நெருக்கடி உலக நாடுகளது அரசியல் தலையீட்டை அதிகரிக்கும் வாய்ப்பினை அந்த நாடுகளுக்கு வழங்கியுள்ளது. இந்தியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளது தலையீடு இலங்கையில் என்றும் இல்லாதவாறு அதிகரித்துள்ளது. அதனை கண்டு கொள்ளும் திறன் அல்லது புரிதல் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு கிடையாது. நாடு துண்டாடப்படக் கூடாது என்ற தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கு கொழும்புத் துறைமுக நகரம் தென்னிலங்கையிலிருந்து துண்டாடப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ளும் எண்ணமே இல்லாதவர்களாக உள்ளனர்.

பாராளுமன்றத்தில் கொழும்புத் துறைமுக நகரம் தொடர்பான சட்டமூலத்திற்கான விவாதம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அத்தகைய விவாதத்தில் எந்த சிங்களத் தீவிர தேசியவாதியும் அதன் பிரிவினை பற்றியோ இலங்கைத்தீவின் இறைமை பற்றியோ அதனால் ஏற்படவுள்ள விளைவுகள் பற்றியோ உரையாடவில்லை. அவ்வாறான ஒரு விடயமே அண்மையில் அமெரிக்க உயர் பாதுகாப்பு தூதுக் குழுவின் இலங்கை வருகை உணர்த்தியுள்ளது.

இலங்கைத்தீவை நோக்கி அமெரிக்காவின் நகர்வுகள் அதிகரித்துள்ளது. இலங்கையை நோக்கி தொடர்ச்சியாக அமெரிக்க உயர் அதிகாரிகளது வரவும் ஆட்சி மீது செலுத்தப்படும் செல்வாக்கும் பிராந்திய அரசியல் உறுதிப்பாட்டை பவப்படுத்துதல் மற்றும் இலங்கையின் இறைமை கடல் பாதுகாப்பு என்பனவற்றுக்கான ஊக்குவிப்பு என்ற பெயரில் நிகழ்ந்து வருகிறது. இலங்கையின் இறைமையைப் பற்றிய அமெரிக்க கவலை தவிர்க்க முடியாததாக மாறியுள்ளது.

அமெரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் ஜீலிசுங் தனது டுவிட்டரில் பின்வருமாறு பதிவு செய்துள்ளார். *I welcome to defense deputy assistant secretary Jed Royal to Sri Lanka. We discussed how the US is working with Sri Lanka on shared goals of promoting Sri Lanka's sovereignty and maritime security enhancing stability in the region and promoting a free and open Indo-Pacific.* அமெரிக்க பாதுகாப்பு துணைச் செயலாளர் தலைமையில் பாதுகாப்புத் தொடர்பில் பேச்சுகளை நடத்தும் நோக்குடன் 20 பேர் கொண்ட அமெரிக்க தூதுக் குழு ஒன்று 14.02.2023 அன்று இலங்கைக்கு வருகை தந்திருந்தது. இரு விமானங்களில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கிய குழுவினர், இலங்கை பாது காப்புத் தரப்புடனான சந்திப்பை நோக்கமாகக் கொண்டுள்ளமை கவனத்திற்குரியதாகும்.

இந்தக் குழுவில் இந்தோ-பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் ஜெடிடியா நோயாலும் கலந்து கொண்டுள்ளமை கவனத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். அது மட்டுமன்றி அத்தகைய குழுவில் உயர் இராணுவ மட்ட அதிகாரிகள் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் கலந்து கொண்டதாகவும் பாதுகாப்பு பொறுத்து கோட்டே மற்றும் சிறிஜெயவர்தணபுர பாதுகாப்பு பிரதேசங்களுக்கு விஜயம் செய்ததாகவும் அங்கு பாதுகாப்பு விடயங்கள் உரையாடப்பட்டதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இத்தகைய தூதுக்குழுவினர் இலங்கைக்கு வருகை தருவதற்கு முன்பே பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் பாதுகாப்புத் தரப்பினால் அதி உயர் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டதாகவும் எந்த பரிசோதனைகளும் இன்றி குறிப்பாக வருகை தந்த அமெரிக்கக் குழுவின் விசா கூட பரிசோதிக்கப்படவில்லை என்பதையும் ஊடகங்கள் செய்தியாக பரிமாறியுள்ளன. மேலும் தூதுக் குழுவினர் வருகை தந்தது முதல் மீளவும் புறப்படும் வரை அவர்களது பாதுகாப்பு பலமானதாக பேணப்பட்டதுடன், அதிவேக நெடுஞ்சாலை முதல் கொழும்பு பாதைகள் மற்றும் அவர்கள் தங்கியிருந்த இடங்கள் அதிக பாதுகாப்புக்குள் இருந்ததுடன், இலங்கை பாதுகாப்புத் தரப்பின் தொடர் கண்காணிப்புக்குள்ளும் இருந்ததாக தெரிய வருகிறது. அவர்களது உள்ளூர் பயணங்களுக்காக தயாரான வாகனங்களுடன் வருகை தந்ததாகவும் அவை மீளவும் கொண்டு செல்லப்பட்டதாகவும் இன்னோர் செய்தியும் உரையாடப்படுகிறது. அதற்கான ஆதாரங்களும் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பண்டார தென்னக்கோன் திருகோணமலையில் அமெரிக்க இராணுவத்தளம் பற்றி உரையாடுவதற்காக அமெரிக்க தூதுக் குழு வருகை தரவில்லை எனவும் அத்தகைய ஊகங்கள் நிலவுவதாகவும் அவர் டெய்லி மிரருக்கு தெரிவித்துள்ளார். அது மட்டுமன்றி இரு நாட்டுக்குமான பாதுகாப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது, இந்தோ-பசுபிக் பாதுகாப்பு மற்றும் பிராந்திய உறுதிப்பாடு பேணுவது, அத்துடன் ரஷ்ய-உக்ரைன் போரின் தாக்கம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக. அவர் டெய்லி மிரருக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் 150 இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அமெரிக்க பயிற்சி வாய்ப்புகளை வழங்கியதுடன், இரு கப்பல்களை இலங்கைக் கடற்படைக்கு வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார். இது வழமையான சந்திப்பு எனவும் அடிக்கடி நிகழ்வதாகவும் வெளிநாட்டுத் தூதுவர்களும் உரையாடல்களும் காலத்திற்கு காலம் நடைபெறுவதாகவும் தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கையில் மூலோபாய நலன்களைக் கொண்டிருக்கின்றன. அவற்றின் பூகோள-அரசியல் போட்டியாளரான சீனாவின் செல்வாக்கு மற்றும் அனைத்து உலக வல்லரசுகளினது கவனத்தை ஈர்க்கும் வகையில் இலங்கை இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் மூலோபாய ரீதியில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது எனவும் தென்னக்கோன் அதன்போது குறிப்பிட்டிருந்தார்.

அமெரிக்க தூதுக் குழுவின் வருகையின் போது இலங்கையின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் இரு தரப்பினரும் ஒரே விடயத்நினை வெளிப்படுத்தியிருந்தனர். அதாவது திருகோணமலைத் துறைமுகத்தை மையப்படுத்தி அமெரிக்க இராணுவ முகாம் அமைக்கப்படும் விடயத்தை இரு தரப்பும் நிராகரித்திருந்தனர். ஆனால் இத்தகைய பாதுகாப்புடன் அதி முக்கியத்துவம் வாய்ந்த விஜயங்கள் ஏன் என்ற கேள்வி வழமையானதே. தென்னக்கோன் குறிப்பிடுவது போல் இது வழமையானதுமல்ல. வெறும் 150 பாதுகாப்புத் தரப்புக்கு பயிற்சியளிக்கவும் இரு கப்பல்களை இலங்கைக் கடற்படைக்கு வழங்குவதற்கானதுமல்ல என்பது புலனாகிறது. அத்தகைய விடயங்களை மேற்கொள்வதற்கே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் காணப்படுகிறார். கடந்த காலங்களில் அவரே மேற்குறிப்பிட்ட அனேகமான பணிகளை மேற்கொண்டிருந்தார். அப்படியாயின் விசேட தூதுக் குழுவின் வருகையின் நோக்கம் தென்னிலங்கை குறிப்பிடுவது போலல்ல என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும். அதனை விரிவாக தேடுதல் வேண்டும்.

ஒன்று, இலங்கை-அமெரிக்கத் தரப்பின் உறவு பலமான நிலையை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. உள்நாட்டு பொருளாதார நெருக்கடியால் அமெரிக்காவுக்கு பல விட்டுக் கொடுப்புகளை தென்னிலங்கை செய்ய முன்வந்துள்ளது. மிலேனிய உடன் பாட்டை நிராகரித்த கடந்த ஆட்சியாளர்கள் முன்வைத்த அதே விடயத்தை தற்போது அமெரிக்கா செயல்படுத்தியுள்ளது.

அதாவது விசா இன்றி அமெரிக்க இராணுவம் வருகை தரவும் இலங்கை நிலப்பரப்பை பயன்படுத்திக் கொள்ளவும் மிலேனிய உடன்பாடு கோரியிருந்தது. அதனையே 20 பேர் கொண்ட தூதுக் குழு தற்போது நிகழ்த்தியுள்ளது. உடன்பாடு எட்டாமலேயே அமெரிக்காவின் பாதுகாப்புத் தரப்பு அத்தகைய நகர்வுகளை சாத்தியப்படுத்தியுள்ளது. இலங்கை ஆட்சியாளர்கள் எதனைக் குறிப்பிட்டாலும் அமெரிக்கா தனது பிராந்திய நலன் பொறுத்து அதி உச்சமான நடவடிக்கையை எடுக்க தயார் என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

இரண்டு, இந்தோ-பசுபிக் தந்திரோபாய வலைப் பின்னலுக்குள் இலங்கையை அதன் முக்கியத்துவம் கருதி வெற்றிகரமாக கையாள அமெரிக்கா முனைகிறது. இலங்கையின் பொருளாதார நெருக்கடியை கையில் எடுத்துள்ள அமெரிக்கா, சர்வதேச நாணய நிதியத்தினூடாக இலங்கையை வழிக்கு கொண்டு வர திட்டமிட்டுள்ளது.

அதுவே சீனாவின் ஒப்புதலின்றியே இலங்கைக்கு கடன் வழங்குவது பற்றி சர்வதேச நாணய நிதியத்தின் கவனத்தில் கொள்ள ஆரம்பித்துள்ளது. அதாவது அமெரிக்க பாதுகாப்புக் குழுவின் வருகை அத்தகைய நிதியத்தை சர்வதேச நாணய நிதியம் வழங்க முன்வந்திருப்பதை கவனத்தில் கொள்ளுதல் பொருத்தமானது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்காவின் உலகளாவிய நலனை கட்டமைக்கும் ஒரு நிதி நிறுவனமாகவே சர்வதேச நாணய நிதியம் காணப்படுகிறது.

கட்டுரையாளர்
தாயகத்தில் இருந்து
பேராசிரியர்
K.T.கணேசலிங்கம்



அது ஒட்டுமொத்த மேற்கின் உபாயமாக அமைந்தாலும் அதன் முழுமையான அறுவடை அமெரிக்காவிற் கானதாகவே உள்ளது. இந்தோ-பசுபிக் வலைப்பின்னலும் சர்வதேச நாணயநிதியத்தின் நகர்வுகளும் ஒரே தளத்தில் அளவீடு செய்ய வேண்டிய விடயமாகவே உள்ளது. இது பற்றிய மேலதிக தேடலுக்கு தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட 'ஒரு பொருளாதார அடியாளின் வாக்குமூலம்' என்ற நூலின் இரு பாகங்களையும் கற்றுக் கொள்வதன் மூலம் புரிந்து கொள்ள முடியும். ஜான் பெர் கின்ஸுக்கு உரிய புரிதல் தனித்துவமானது.

மூன்று, சீனாவுக்கு நெருக்கடி அதிகரிக்கும் நடவடிக்கையாக அமெரிக்க பாதுகாப்புக் குழுவினது வருகை விளங்குகிறது. இதனால் இலங்கை-சீன உறவு பாதித்து விடும் என்று விவாதிக்க முடியாது. மாறாக அமெரிக்கத் தரப்பு அவ்வாறு ஒரு சூழலை உருவாக்குவதே அவசியமானதென கருதுகிறது.

இவ்வாறான முயற்சியால் சீனாவிடம் சென்ற பல நாடுகளை அமெரிக்கா மீட்டுள்ளதாக கருதுகிறது. ஆனால் அத்தகைய பட்டியல் அதிகமானதல்ல என்பதுவும் இலங்கை அத்தகைய நகர்வுக்குப் பதிலாக பொருளாதார மீட்சிக்கான உத்தியாகவே இத்தகைய நகர்வுகளை கருதுகிறது என்பது உணரப்பட வேண்டும். தென்னிலங்கை ஆட்சியாளரைப் பொறுத்தவரை அமெரிக்கா கருதுவது போல் அல்லாது அதாவது சீனாவிடமிருந்து விடுபடுவதை விட பொருளாதார நெருக்கடியிலிருந்தும் வடக்கு, கிழக்கு அரசியல் நெருக்கடியிலிருந்தும் மீள்வதே நோக்கமாகும்.

அத்தகைய நலனும் அமெரிக்காவின் நலனும் ஓரிடத்தில் சந்திப்பதனால் இரு நாட்டுக்குமான உறவு பலமானதாக கட்டமைக்கப்பட முயல்கிறது. ஆனாலும் இலங்கை - சீன உறவு பலமானதாகவே உள்ளது. அத்தகைய உறவை இலங்கை ஆட்சியாளர்கள் ஒருபோதும் பலியிட மாட்டார்கள், ஆனால் அமெரிக்காவுடனும் மேற்குடனும் உறவை வைத்துக் கொள்வதிலும் தந்திரோபாயமான நகர்வுகளை மேற்கொள்வார்கள். அத்தகைய நகர்வொன்றுக்குள்ளேயே அமெரிக்க-,இலங்கை உறவு அமைந்துள்ளது. இத்தகைய புரிதலின் பிரதிபலிப்பே அமெரிக்க உயர் பாதுகாப்பு அதிகாரிகளது இராணுவ நடவடிக்கையாக தூதுக் குழுவின் விஜயம் அமைந்திருந்தது. இது ஒரு மென் இராணுவ நடவடிக்கையே (*Soft-Military Operation*). அதனை இலங்கை எதிர்கொண்ட விதமும் தனித்துவமானது.

நான்கு, அமெரிக்க - இந்திய முறுகல் ரஷ்ய-உக்ரைன் போருக்குப் பின்னர் அதிகரித்து (18ம் பக்கம் பார்க்க)

# உலக வங்கித் தலைவர் பதவிக்கு இந்தியரை பரிந்துரைத்த ஜோ பைடன்!



உலக வங்கியை வழி நடத்த அமெரிக்கா சார்பில் அமெரிக்க இந்தியரான அஜய் பங்காவை அந் நாட்டின் அதிபர் ஜோ பைடன் பரிந்துரை செய்துள்ளார்.

காலநிலை மாற்றத்தை கையா ள்வதில் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று வங்கியின் மீது அமெரிக்காவின் அழுத்தம் அதிகரித்து வரும் சூழலில் இந்த பரிந்துரை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கு முன்பாக, கிரெடிட் கார்டு ஜாம்பவனாக வர்ணிக்கப்படும் மாஸ்டர் கார்டு நிறுவனத்தை பல ஆண்டுகள் தலைமை தாங்கி வழி நடத்திய பெருமைக்குரிய அஜய் பங்கா தற்போது தனியார் பங்கு நிறுவனத்தில் பணியாற்றி வரு கிறார்.

வங்கியை தனியார் துறையுடன் இணைந்து தனது இலக்குகளை நோக்கி பயணிக்க வைப்பதில் அவர் அனுபவம் வாய்ந்தவர் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். அமெரிக்காவின் பரிந்துரையாக அஜய்பங்காவின் பெயரை ஜோ பைடன் பரிந்துரைத்தாலும், உலக வங்கியின் அடுத்த தலைவரை அதிகாரப்பூர்வமாக நியமிப்பது என்பது வங்கியின் நிர்வாகத்திற்கு உட்பட்டது ஆகும்.

வங்கியானது மூன்று வேட்பாளர் களின் இறுதிப் பட்டியலை நேர் காணல் செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும், மே மாத தொடக்கத்தில் புதிய தலைவரின் பெயரை அறிவிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதாகவும் கூறியது. மேலும், தலைவர் பதவிக்கு பெண்களின் பெயரை பரிந்துரைக்க அதிகம் ஊக்கமளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. வேறு நாடுகளும் தலைவர் பதவிக்கு நபர்களை பரிந்துரைக்குமா என்பது தெரியவில்லை.

உலக வங்கியின் மிகப் பெரிய பங்குதாரரான அமெரிக்கா, ஒவ்வொரு ஆண்டும் நாடுகளுக்கு பில்லியன் கணக்கான டாலர்களை கடனாக வழங்கும் இந்த நிறுவனத்தை வழிநடத்தும் நபரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை வழக்கமாகக் கொண்டுள்ளது.

சரியான நோக்கங்களை அமைத்து நல்லவைக்கு உத்வேகம் அளிக்கும் விதமாக உலகவங்கி சேவையாற்றுவதை பார்க்க தான் விரும்புவதாக அமெரிக்க நிதிய மைச்சர் ஜேனட் யெல்லன் கூறியுள்ளார்.

மேலும், அரசாங்கங்கள், நிறுவனங்கள் மற்றும் லாப நோக்கற்ற நிறுவனங்களுக்கிடையில் கூட்டாண்மைகளை உருவாக்குவதற்கான அஜய் பங்காவின் சாதனையை சுட்டிக்காட்டி அவர் அந்த பொறுப்பை ஏற்க தனித்துவமாக' தயாராக இருப்பதாக ஜேனட் யெல்லன் கூறினார்.

### யார் இந்த அஜய் பங்கா?

அமெக்க குடியுரிமை பெற்றவ ரான அஜய் பங்கா தனது பணி வாழ்வை இந்தியாவில் தொடங்கி னார். இவரது தந்தை இராணு வத்தில் பணியாற்றியவர். மாஸ்டர் கார்டு நிறுவனத்தில் இணைவ தற்கு முன்பாக நெஸ்ட்லே, சிட்டி குரூப் ஆகியவற்றிலும் அவர் இணைந்து பணியாற்றியுள்ளார். மாஸ்டர் கார்டு நிறுவனத்தில் இருந்து 2021ஆம் ஆண்டில் விலகிய அஜய் பங்கா தற்போது, ஜெனரல் அட்லாண்டிக் என்னும் தனியார் பங்கு நிறுவனத்தில் துணைத் தலைவராக உள்ளார். அங்கு அவர் அதன் 3.5பில்லியன் டாலர்கள் மதிப்பிலான காலநிலை நிதியின் ஆலோசனைக் குழுவில் உள்ளார்.

அவர் வெள்ளை மாளிகையுடன் இணைந்து மத்திய அமெரிக்கா விற்கான கூட்டு என்ற திட்டத்தின் துணை தலைவராகவும் பணி யாற்றியுள்ளார், இது அமெரிக்காவில் தனியார் துறை முதலீட்டை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டஒரு முன்முயற்சியாகும்.

சர்வதேச நிறுவனங்களை எப்போதும் விமர்சித்து வரும் குடியரசு கட்சியினர் உள்ளிட்ட அமெரிக்க நாடாளுமன்றத்தில், வங்கியின் மீது நம்பிக்கையை ஏற்படுத்த வணிகத்தில் அஜய் பங்காவுக்கு உள்ள பல ஆண்டுகள் அனுபவம் உதவும் என்று உலகளாவிய மேம்பாட்டு மையத்தின் நிர்வாக துணைத் தலைவர் அமெண்டா கிளாஸ்மென் கூறுகிறார்.

அதேநேரத்தில், அஜய் பங்காவிற்கு அரசாங்கம் தொடர்பாகவும் வங்கியின் அடிப்படையான வளர்ச்சி பணிகள் தொடர்பாகவும் குறைவான அனுபவங்களே உள்ளதால் அவர் சரியான தேர்வு தானா என்பதை நாம் பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். வங்கி எப்படி இருக்க வேண்டும் என்பது தொடர்பாக தனது பார்வை குறித்து அஜய் பங்கா பேசுவதை கேட்க ஆர்வமாக உள்ளேன்'' என்று அமெண்டா கூறினார். உலக வங்கியின் அடுத்த தலைவராக யார் பொறுப்பேற்றாலும் கடனில் தவிக்கும் குறைந்த வருவாய் கொண்ட நாடுகளின் உடனடி நிதித் தேவைகளை சமாளிப்பது, காலநிலை மாற்றம், சர்வதேச மோதல்கள் மற்றும் பெருந்தொற்று அபாயங்களை சமாளிப்பது போன்ற சவால்களை சந்தித்தாக வேண்டும்.

உலக வங்கியின் இந்த அடுத்த கட்ட உத்தியில் வாழ்வா சாவா என்ற நிலையும் உள்ளது என்றும் அமெண்டா கிளாஸ்மென் கூறுகிறார். உண்மையிலேயே உலக வங்கி பொருத்தமானது தான் என்று கருதப்படவோ அல்லது தேவையில்லாதது என்று கருதி ஓரங்கப்படவோ கூடிய நேரம் இது'' என்றும் அவர் குறிப்பிடுகிறார். வங்கி வளர்ச்சியடைய வேண்டும் என்பதில் பொதுவான ஒருமித்த கருத்து இருந்தாலும், எப்படி என்பது தொடர்பாக அனைவரிடத்திலும் குறைவான உடன்பாடே உள்ளது, மேலும் செய்யப்பட வேண்டிய செயல்கள் பற்றிய கவலையும் உள்ளது,'' என்று அவர் மேலும் கூறினார்.

உலக வங்கியின் தற்போதைய தலைவராக டேவிட் மால்பஸ் உள்ளார். இவர் அமெரிக்காவின் முன்னாள் அதிபராக இருந்த டொனால்ட் டிரம்ப் மூலம் பரிந்துரை செய்யப்பட்டவர். 5 ஆண்டுகள் அவருக்கு பதவி உள்ள நிலையில், ஓராண்டுக்கு முன்பாகவே, அதாவது இந்தாண்டு ஜீன் மாதத்தில் தான் தலைவர் பதவியில் இருந்து விலகக் போவதாக அவர் அறிவித்திருந்தார். ஒருவேளை, ஜோ பைடனின் பரிந்துரை ஏற்கப்படும் பட்சத்தில் டேவிட் மால்பஸ் இடத்தை அஜய் பங்கா பூர்த்தி செய்வார். எனலாம்.


## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**, Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# சி.ஐ.ஏ தலைவரின் வருகை:- நீடிக்கும் மர்மம்!

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்





அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு உறவுகள் கொழும்பு அரசியலில் மீண்டும் பேசு பொருளாக மாறத் தொடங்கியிருக்கிறது. கடந்த ஆண்டு நடுப்பகுதியில் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்துக்குப் பின்னால், அமெரிக்கத் தூதுவர் இருந்தார் என்ற குற்றச்சாட்டு, ஆளும் தரப்பில் இருந்தவர்களால் சுமத்தப்பட்டது.

ராஜபக்ஷவினர் இந்தக் குற்றச்சாட்டை வெளிப்படையாக முன் வைக்கவில்லை. அவர்களின் ஆதரவாளர்கள் ,தனை முன்னிறுத்தி குற்றம் சாட்டினார்கள். அவ்வாறான கருத்துக்களின் எதிர் விளைவுகள் அவர்களின் அமெரிக்கத் தொடர்புகள், நலன்களில் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அச்சம் தான் அவர்கள் பதுங்குவதற்குக் காரணம். ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பின்னர், அமெரிக்கத் தலையீடுகள் குறித்த விமர்சனங்கள், சந்தேகங்கள், குற்றச்சாட்டுகள் தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வருகின்றன.

இலங்கையின் அரசியல்வாதிகளில் தங்களை இடதுசாரிகளாக அடையாளம் காட்டிக் கொள்ளும் சிலருக்கு அமெரிக்க காய்ச்சல் இருக்கிறது. பேராசிரியர் திஸ்ஸ விதாரண, டி.யூ குணசேகர, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்களை அவ்வாறு குறிப்பிடலாம். பேராசிரியர் திஸ்ஸ விதாரண எப்போது, செய்தியாளர் சந்திப்பை நடத்தினாலும், திருகோணமலையில் அமெரிக்கா தனது படைத் தளத்தை அமைக்கும் முயற்சிகளை முன்னெடுக்கிறது. அமெரிக்கத் தளம் வரப் போகிறது என்ற கதையைத் தொடாமல் இருக்கமாட்டார். அந்தளவுக்கு அவருக்கு அமெரிக்க வெறுப்பு அல்லது பயம் இருக்கிறது.

இலங்கையில் அமெரிக்கா தளம் அமைத்து விடக் கூடாது என்பதற்காக, விடுக்கின்ற ஒரு முன்னெச்சரிக்கை என்றும் குறிப்பிடலாம். திருகோணமலையில் அமெரிக்கா தளம் அமைக்கவிருக்கிறது அல்லது தளம் அமைக்க விரும்புகிறது என்பது 1980களில் இருந்து காணப்பட்டு வருகின்ற ஒரு கருத்து.

இந்திய இலங்கை உடன்பாட்டுக்குப் பின்னர் அவ்வாறான தளம் அமைக்கும் வாய்ப்பு இல்லாத சூழ்நிலை காணப்பட்டது. அப்போது இந்தியாவும் அமெரிக்காவும் எதிர் எதிர் முகாம்களில் இருந்தன. ஆனால் இப்போது நிலைமை மாறியிருக்கிறது. அமெரிக்காவுடன் நெருங்கிய உறவுகளைக் கொண்டிருக்கிறது இந்தியா. இரண்டு நாடுகளும் பாதுகாப்பு ரீதியாக வலுவான தொடர்புகளைப் பேணுகின்றன.

இத்தகையதொரு நிலையில் இலங்கையில் உள்ள அமெரிக்க வெறுப்பு அரசியல்வாதிகளுக்கு, அமெரிக்க-இந்திய தளம் திருகோணமலையில் அமைக்கப்பட்டு விடுமோ என்ற அச்சம் தோன்றியிருக்கிறது. இவ்வாறான சந்தேகங்கள் தோன்றியிருந்த நிலையில் தான், கடந்த 16ஆம் திகதி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோனைச் சந்தித்த, அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்தின், இந்தோ-பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான முதன்மைப் பிரதி உதவிச் செயலர் ஜெடிடியா ரோயல், திருகோணமலையில் தளம் அமைப்பது பற்றிய கலந்துரையாடலுக்காக தான் இங்கு வரவில்லை என்று கூறிக் கொண்டே, ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்.

இந்த தகவலை வெளியிட்டவர், பாதுகாப்பு ,ராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தான். இதிலிருந்து, ஜெடிடியா ரோயலின் பயணம், ஏற்கனவே பேசப்படும் விடயங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட ஒன்று அல்ல என்பது வெளிச்சமாகியிருக்கிறது. திருகோணமலையில் தளம் அமைப்பது குறித்துப் பேச வரவில்லை என்று அமெரிக்க அதிகாரி குறிப்பிட்டது, அவ்வாறானதொரு அச்சம் இலங்கைக்கு இருப்பதை மாத்திரம் புலப்படுத்தவில்லை. அவ்வாறான அச்சம் இலங்கைக்கு இருப்பதை அமெரிக்கா அறிந்து கொண்டிருக்கிறது என்பதையும் வெளிப்படுத்தியிருக்கிறது. இதனை மட்டும் வைத்துக் கொண்டு திருகோணமலையில் தளம் அமைப்பது பற்றிக் கலந்துரையாடப்படவில்லை என்ற முடிவுக்கு வர முடியாது.

இரண்டு சி-17 குளோப் மாஸ்டர் போக்குவரத்து விமானங்களில், 14ஆம் திகதி மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய அமெரிக்க குழுவில் இடம் பெற்றிருந்த, ஜெடிடியா ரோயல், 16ஆம் திகதியே, தனி ஆளாக, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் மற்றும் பாதுகாப்புச் செயலாளரை சந்தித்திருந்தார்.

15ஆம் திகதி இந்தக் குழுவினர் கொழும்பில் என்ன செய்தனர், யாரைச் சந்தித்தனர் என்ற கேள்விகள் உலாவுகின்றன. ஜனாதிபதியையும், புலனாய்வு அதிகாரிகளையும் அவர்கள் சந்தித்ததாக விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறார். புலனாய்வுப் பிரிவு அலுவலகத்துக்கு ஆயுதங்களுடன் அமெரிக்க அதிகாரிகள் சென்ற போது, அங்கிருந்தவர்கள் நிராயு தபாணிகள் ஆக்கப்பட்டதாகவும் அவர் குற்றம் சாட்டியிருக்கிறார். இலங்கைப் புலனாய்வுப் பிரிவின் தகவல்கள், தரவுகள், அமெரிக்க புலனாய்வுப் பிரிவினால் வடிகட்டப்படும் நிலை தோன்றியிருப்பதாகவும் அவர் எச்சரித்திருக்கிறார்.

ஆனால் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், இந்தக் குற்றச்சாட்டுகள் முற்றிலும் பொய்யானவை என்றும் ஆதார மற்றவை என்றும் குறிப்பிட்டிருக்கிறார். 'அமெரிக்க குழு வந்து என்னையும் சந்தித்தது. அவர்களுடனனான கலந்துரையாடலின் போது, பிராந்திய பாதுகாப்பு மற்றும் உக்ரேனில் ஏற்பட்ட போரின் விளைவுகள், பயிற்சி திட்டங்கள், வழக்கமான ஆர்வமுள்ள பிற விடயங்களைப் பற்றி பேசினோம்.

அதில் என்ன தவறு? நாம் முழு உலகத்துடனும் நட்புறவு கொண்ட ஒரு தேசம் மற்றும் யாருக்கும் எதிரிகள் அல்ல. எனவே, மூத்த அரசியல்வாதிகள் பகிரங்க அறிக்கைகளை வெளியிடும் போது கவனமாகவும் பொறுப்புடனும் இருக்க வேண்டும் என்று அவர் எச்சரித்திருக்கிறார்.


தற்போதைய அரசாங்கம், உண்மைகளை வெளியிடுகின்ற ஒன்று அல்ல என்பதால், இந்த விடயத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கூறுவதெல்லாம் சரியே எனக் கருத முடியாது. ஜெடிடியா ரோயலின் இலங்கைப் பயணம் குறித்த கேள்விகளுக்கு மத்தியில் அவரது பயணமும், அவருடன் கூட வந்தவர்களின் பயணமும் ஒரே நோக்கம் கொண்டதா என்ற சந்தேகங்கள் பலருக்கு இருக்கிறது.

ஏனென்றால், 14ஆம் திகதி மாலையில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கிய இரண்டு விமானங்களிலும், 20,ற்கும் அதிகமான அமெரிக்க அதிகாரிகள் வந்திருந்தனர். அவர்களில் ஜெடிடியா ரோயல் மட்டும், 16ஆம் திகதி பாதுகாப்பு செயலாளர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோரைச் சந்தித்திருந்தார். அவருடன் கூட வந்த யாரும், சந்திப்புகளில் பங்கேற்றிருக்கவில்லை. இந்தச் சந்திப்பு நடப்பதற்கு முதல் நாளே, அதாவது 15ஆம் திகதி பிற்பகல் ,ரண்டு விமானங்களும் புறப்பட்டுச் சென்று விட்டதாகவும் தகவல்கள் வெளியாகின. இந்த விமானங்களில் வந்தவர்கள், வெளிநாட்டு தலைவர்கள் பயன்படுத்தும், வி.வி.ஐ. பி எனப்படும், மிக முக்கிய பிரமுகர்களுக்கான நுழைவாயில் வழியாகவே உள்வந்து வெளிச் சென்றுள்ளனர். அவர்களின் பயணத்தின் போது குடிவரவு அதிகாரிகளின் செயல்முறைகள் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்று விமல் வீரவன்ச கூறியிருக்கிறார்.

அது பற்றியெல்லாம், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வாய்திறக்கவில்லை. இந்தக் குழுவினரின் பயணம் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாதென, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் கூறியிருக்கிறார். ஜெடிடியா ரோயல், 16ஆம் திகதி அமெரிக்க தூதரகத்துக்குச் சென்று அமெரிக்க தூதுவர் ஜூலி சங்குடன் பேச்சு நடத்தியிருக்கிறார். அதற்கு முதல் நாளான, 15ஆம் திகதி அமெரிக்க தூதரகத்தில், ஒரு நிகழ்வு இடம் பெற்றது. கறுப்பு வரலாற்று மாதத்தை முன்னிட்டு, தூதரகத்தில், பிளாக் லைவ்ஸ் மேட்டர் கொடி, அரைக்கம்பத்தில் ஏற்றப்பட்டது.

உலகெங்கிலும் இன பாகுபாடு இல்லாத உலகத்தையும் அனைவருக்கும் சமமான வாய்ப்புள்ள எதிர்காலத்தையும் தேடும் மக்களுடனான ஒற்றுமையை வெளிப்படுத்தும் நிகழ்வு அது. அந்த முக்கியமான நிகழ்வில் கூட, ஜெடிடியா ரோயல் உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகள் பங்கேற்றிருக்கவில்லை. இந்த நிலையில் ,லங்கைக்கு ,ரண்டு குளோப் மாஸ்டர் விமானங்களில், உச்சக் கட்ட பாதுகாப்புடன் வந்து சென்றவர், அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ.வின் தலைவர் (16ம் பக்கம் பார்க்க)

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

EELANADU 03 Mar 2023 ஈழநாடு

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?

மேடராசி அன்பர்களே! எல்லா கஷ்டங்களும் நீங்கி மனதில் நிம்மதி உண்டாகும். முயற்சிகள் சாதகமானபலன் பெறும். வாகனங்களில் செல்லும் போதும், இயந்திரங்களை கையாளும் போதும் தீ, மின்சாரம் ஆகியவற்றிலும் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. வீட்டில் சுபகாரியங்கள் நடக்கலாம். திருமண முயற்சிகள் கைகூடும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். வியாபாரம், தொழிலில் ஏற்பட்ட தொய்வு நீங்கும்.

ரிஷபராசி அன்பர்களே! திருமணம் தொடர்பான முயற்சிகள் கைகூடும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த இடைவெளி நீங்கும். இனிமையான பேச்சின் மூலம் எல்லாவற்றையும் நல்ல முறையில் செய்து முடிப்பீர்கள். தொழில் வியாபாரத்தில் இருந்த பிரச்னைகள் தீர்ந்து நல்லநிலை உண்டாகும்.

மிதுனராசி அன்பர்களே! எதிலும் முன் யோசனையுடன் செயல்படுவது நல்லது. வீண் விவாதங்களால் அடுத்தவர்களுடன் தகராறு உண்டாகலாம். எனவே கவனமாக பேசுவது நல்லது. முயற்சிகளில் தடை உண்டாகலாம். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். பிள்ளைகள் வழியில் இருந்த பிரச்னைகள் தீரும். முக்கிய நபர்களின் நட்பு உண்டாகும். வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும்.

கடகராசி அன்பர்களே! துணிச்சலான சில முடிவுகளை எடுப்பதன் மூலம் நன்மைகளை பெறுவீர்கள். கோபத்தை கட்டுப்படுத்துவதன் மூலம் நட்பு, உறவினர்களிடம் சுமூகமான நிலை நீடிக்கும். மனை, வீடு வாங்க எடுக்கும் முயற்சிகள் சற்று தாமதமாக நடக்கும். எதிலும் நிதானத்தை கடைப்பிடிப்பது நன்மை தரும். திருமண முயற்சிகள் கைகூடும். தடைபட்ட பணவரத்து தடை நீங்கி கைக்கு வந்து சேரும்.

சிம்மராசி அன்பர்களே! எதிலும் தயக்கமோ, பயமோ இல்லாமல் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். அவசர முடிவுகளை எடுப்பதை தவிர்ப்பது நல்லது. விரும்பதகாத ஆசைகள் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. வெளிநாடு செல்வதில் எதிர்பாராத சிக்கல் ஏற்படலாம். கணவன் மனைவிக்கிடையே அடிக்கடி வாக்குவாதங்கள் உண்டாகலாம்.

கன்னிராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். குடும்பத்தினரால் நன்மை உண்டாகும். பொருள் சேர்க்கை உண்டாகும். தடைபட்ட பணம் கைக்கு வந்து சேரும். மரியாதையும், அந்தஸ்தும் உயரும். தந்தை மூலம் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். புண்ணிய தலங்களுக்கு சென்று வருவீர்கள். காரிய வெற்றி உண்டாகும். தொழில் தொடர்பான பிரச்னைகள் தீரும். தொழில் வியாபார போட்டிகள் நீங்கும்.

துலாம்ராசி அன்பர்களே! உங்கள் மனதை வாட்டி வந்த சிக்கல்கள் தீரும். வெளிநாட்டு பயணங்கள் செல்ல நேரிடலாம். பண விஷயத்தில் கவனமாக இருப்பது நல்லது. புதிய வீடு கட்டும் பணி அல்லது பழைய வீட்டை புதுப்பிக்கும் பணிகள் நடைபெறும். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் இருக்கும். வழக்குகளில் சாதகமான பலன் காணப்படும். நீண்ட நாட்களாக இருந்த நோய் நீங்கும். தொழில் வியாபார போட்டிகள் விலகும். மற்றவர்களால் ஏற்பட்ட பழிசொல் நீங்கும்.

விருச்சிகராசி அன்பர்களே! எதிர்பார்த்த தகவல்கள் நல்ல தகவல்களாக வந்து சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். வாகனம், வீடு மூலம் செலவுகள் அவ்வப்போது ஏற்படலாம். எதையும் செய்யும் முன் தயக்கம் உண்டாகலாம். குடும்பத்தில் திருமண வயதில் இருப்பவர்களுக்கு திருமணம் கைகூடும். பிள்ளைகள் உடல் நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் சற்று கவனமாக இருப்பது நல்லது.



தனுசுராசி அன்பர்களே! மன துணிவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். திருமண முயற்சிகள் சாதகமான பலன் தரும். புத்திரர்களுக்கு நன்மை உண்டாகும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்னை குறையும். புத்திசாதுரியம் அதிகரிக்கும். காரியங்களில் தடைதாமதம் உண்டாகலாம். எதிலும் சரியான முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றம் ஏற்படும். திடீர் செலவுகள் உண்டாகும்.

மகரராசி அன்பர்களே! எல்லா தொல்லையும் நீங்கி நன்மை ஏற்படும்.ஆன்மீக பயணம் செல்ல நேரிடும். குடும்பத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்களுடன் தேவையற்ற வாக்குவாதம் உண்டாகலாம். வாகனங்களால் செலவும் ஏற்படும். உடல் ஆரோக்யம் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் கட்டுப்பாட்டில் இருக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். எதிர்பார்த்த லாபம் குறையும்.

கும்பராசி அன்பர்களே! ஓயாத வேலையும் அலைச்சலும் இருக்கும். உடன் பிறந்தவர்களுடன் மனவருத்தம் ஏற்படும் விதத்தில் ஏதாவது சம்பவங்கள் நடக்கலாம். உறவினர் நண்பர்கள் உங்களை சரிவர புரிந்து கொள்ளாமல் உங்களை விட்டு பிரிந்து செல்லக்கூடும். திடீர் மனக்கவலை ஏற்படும். திருமணம் தொடர்பான முயற்சிகள் சாதகமான பலன் தரும்.

மீனராசி அன்பர்களே! பொருள் சேர்க்கையும் உடல் ஆரோக்கியமும் உண்டாகும். கடன் பிரச்சனைகள் தொல்லை தராமல் கட்டுக்குள் இருக்கும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். வாக்கு வன்மை அதிகரிக்கும். உடன் பிறப்புகளிடம் கவனமாக பேசுவது நல்லது. குடும்பத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் நீடிக்கும். மனதுக்கு பிடித்தபடி பொழுதை கழிப்பீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# தலைவர் பிரபாகரன் பற்றிய நெடுமாறனது கூற்று உண்மை அல்ல வெளிநாடுகளில் நிதி திரட்டலுக்கானது!

(4ம் பக்கத் தொடர்ச்சி) யுத்தம் முடிந்து 13 வருடங்களாகி விட்டன. பிரபாகரனைப் பொறுத்தவரையில் இவ்வளவு காலம் அவர் ஒளிந்திருக்கும் ஒருவர் அல்ல'.

சரி, பிழைகளுக்கு அப்பால் தனிநாட்டுப் போராட்டத்துக்கு அவர் விஸ்வாசமாக இருந்தார். எங்கள் எல்லோரையும் விடவும் அவர் ஆகக் கூடியளவில் அதற்கு விஸ்வாசமாக இருந்தார். அது கேள்விக்கு அப்பாற்பட்டது'.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான போது, நாங்கள் ஜனநாயக அரசியலுக்குத் திரும்பினோம். ஆனால், தனி நாட்டுக்காக கடைசி வரை பிரபாகரன் போராடினார் என சித்தார்த்தன் கூறினார்.

தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளை போராட்டத்துக்காக பிரபாகரன் அர்ப்பணித்தமைச் சுட்டிக் காட்டிப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன், `தனது குடும்பத்தவர்களை வெளிநாட்டில் வைத்திருப்பதற்கான சந்தர்ப்பம் பிரபாகரனுக்கு இருந்தது. அவர்கள் முன்பு டென்மார்கில் இருந்தார்கள். ஆனால், அவர்களை பிரபாகரன் பின்னர் தன்னிடம் அழைத்துக் கொண்டார்' என்றார். இவ்வாறான ஒரு மனிதர் இவ்வளவு காலமும் ஒளிந்து கொண்டு இருக்க மாட்டார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மறுபுறமாக, பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என வைத்துக் கொண்டாலும், அவரால் பழையபடி புலிகள் இயக்கத்தை மீளக் கட்டமைக்க முடியாது என சித்தார்த்தன் கூறுகின்றார். `அவருடைய வயது அதற்கு முக்கியமான தடையாக இருக்கும். வடக்கு – கிழக்கு மாகாணங்களின் தற்போதைய நிலை, அங்குள்ள இளைஞர்களின் மன நிலை, இராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவினரின் கட்டுப்பாடு போன்றவற்றைத் தாண்டி, அங்கு ஒரு போராட்ட இயக்கத்தை கட்டியெழுப்ப முடியாது' என்கிறார்.


இவற்றுக்கெல்லாம் அப்பால், இந்தியாவின் பின்புலம் இருந்தமையினால் தான் தமிழர் போராட்ட இயக்கங்களை இலங்கையில் கட்டியெழுப்ப முடிந்தது என்று குறிப்பிட்ட அவர், இப்போது இந்தியாவின் நிலைப்பாடு வித்தியாசமாக உள்ளது என்கிறார். `இனி தமிழர் தரப்பிலிருந்து ஆயுதப் போராட்டம் நடப்பதை ஆதரிப்பதற்கான சமிக்ஞைகளை இந்தியா காட்டாது என நான் நம்புகிறேன்' எனவும் தெரிவித்தார்.

இந்தியா தற்போது தனது பலத்தை பொருளாதார ரீதியில் தான் காட்ட விரும்புகிறது. தமிழ் நாட்டிலுள்ளவர்களில் குறைந்தளவானவர்களே ஆயுதப் போராட்டத்துக்கு ஆதரவாக உள்ளனர்.

பெரும்பான்மையானோர் மனதளவில் முழுமையாக மாற்றமடைந்துள்ளார்கள். அங்கு – மேல் நடுத்தர வர்க்கத்தினர் (*Upper middle class*) அதிகளவில் உள்ளனர். பொதுவாகவே இந்த வர்க்கத்தினர் போராட்டங்களில் ஈடுபடுவது மில்லை, அக்கறையும் காட்டுவதில்லை' என, தனது கருத்துக்கான நியாயங்களை அவர் முன்வைத்தார்.

இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் தமிழ் நாட்டு மக்களிடம் ஓர் அனுதாப உணர்வு உள்ளதாக கூறும் சித்தார்த்தன், அவர்களில் அரசியல்வாதிகளும் இருக்கின்றனர் என்கிறார். `இலங்கைத் தமிழ் மக்களுக்கு நல்லதொரு தீர்வு கிட்ட வேண்டும் என அவர்கள் விரும்புகின்றனர். ஆனால், இலங்கை தமிழர்கள் ஆயுதப் போராட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு தமிழ்நாட்டு மக்கள் ஆதரவு வழங்க மாட்டார்கள் என்றார். நன்றி:- பிபிசி

# கோயிலில் முதல்முறையாக ரோபோ யானை



கேரளாவில் கோயில் ஒன்றில் மத சடங்குகளை செய்வதற்காக முதல் முறையாக ஒரு ரோபோ யானை அமைக்கப் பட்டுள்ளது. சடங்குகளுக்குப் பயன்படுத்தப்படும் விலங்குகளின் நலன் குறித்த கவலைகளுக்கு மத்தியில், தென்னிந்திய மாநிலமான கேரளாவில் உள்ள ஒரு கோவிலில் ஒரு பெரிய இயந்திர யானை அமைக்கப் பட்டுள்ளது. 10 அடி 6 அங்குலம் (3.2 மீட்டர்) உயரம் கொண்ட இந்த இயந்திர யானை, இரிஞ்சாடப் பிள்ளி ராமன் என்று அழைக்கப்படுகிறது.

இந்த ரோபோ யானையை நன்கொடையாக வழங்கிய PETA அமைப்பின் செய்திக் குறிப்பின்படி, `பாதுகாப்பான மற்றும் கொடுமை இல்லாத' வழியில் இரிஞ்சாடப் பில்லி ஸ்ரீகிருஷ்ணா கோவிலில் விழாக்களை நடத்த இது பயன்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளது. இந்தியாவில் சிறைபிடிக்கப்பட்ட யானைகளில் பெரும் பாலானவை சட்டவிரோதமாக அல்லது அனுமதியின்றி வேறு மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று PETA அமைப்பு தெரிவித்துள்ளது.

விலங்குகள் கடுமையான தண்டனைகள் மற்றும் உலோக முனை கொண்ட கொக்கி கொண்ட ஆயுதங்களால் அடித்து துன்புறுத்தப்படுவதாக PETA India மேலும் கூறியது. இதன் விளைவாக, பல யானைகளுக்கு வலிமிகுந்த காயங்கள் ஏற்படுகின்றன. போதுமான உணவு, தண்ணீர் அல்லது கால்நடை பராமரிப்பு இல்லாத யானைகள் சமூக விரோத நடத்தையை வெளிப்படுத்தலாம். விரக்தியடைந்த யானைகள் பெரும்பாலும் சிறையிலிருந்து விடுபட முயல்கின்றன. இதன் விளைவாக மற்ற விலங்குகள், மனிதர்கள் அல்லது சொத்துக்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்று PETA கூறியது.

நன்கொடையாக வழங்கப்பட்ட ரோபோ யானையை கோவிலில் சேர்ப்பதற்காக `நடையிருத்தல்' எனப்படும் சமய விழாவில் சமூக தலைவர்கள் கலந்து கொண்டனர். கோவிலின் தலைமை அர்ச்சகர் ராஜ்குமார் நம்பூ திரி, இந்த நன்கொடைக்காக மிகவும் மகிழ்ச்சியாகவும் நன்றியுடனும் இருப்பதாக கூறினார். இந்த திட்டத்தின் ஆதரவாளரான நடிகை பார்வதி திருவோத்து, இந்த நடவடிக்கை விலங்குகள் `மரியாதையான மற்றும் கண்ணியமான வாழ்க்கையை' பெற உதவும் என்றார்.

1997 முதல் 2012 வரையிலான 15 ஆண்டு காலப்பகுதியில், சிறைபிடிக்கப்பட்ட யானைகள் கேரளாவில் 526 பேரைக் கொன்றதாக PETA இந்தியா தெரிவித்துள்ளது.

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.


## *At Need Funeral Arrangements*
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்

வீடு வாங்க.. விற்க..

HomeLife

Ravi. Paramu
Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200

HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6



RANJANI THIRUKESWARAN LAW OFFICE





- Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
- Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
- Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
- Family Law: குடும்ப வழக்குகள்
- Last Wills: உயில் தயாரித்தல்
- Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்

2855 Markham Road Suite 209
Toronto -ON- M1X 0C3
(Markham / McNicoll )
416 291 2242

Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)

இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய
அழையுங்கள் 416 841 9600



OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST

HOMELIFE

ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*





RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES

$599*
FLAT RATE

Aalayaa

2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500

உங்களிடம் ..
திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?

வணிக உரிமையாளர்களுக்கும்
சுயதொழில் செய்வோருக்கும்
மகிழ்ச்சியான செய்தி!
உங்கள் வருமான மதிப்பீடுகள் இல்லாமல்
மாதந்தோறும் $5000 வரை அங்கவீனக்
காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.

விபரங்களுக்கு அழையுங்கள்



அஜித் சபாரட்ணம்
647-401-5800
416-439-2800

10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

